★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 15 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්
92
1932–2024 ANNIVERSARY

வரு. 92 இல. 167 | Monday 15, July, 2024 | 16 பக்கங்கள் | 50/-



## ரூபவாஹினி ஒளிப்பதிவின் போது உணர்வை வெளிப்படுத்திய மொஹிதீன் பேக் குடும்பத்தினர்!

(முழுவிபரம் 4 ஆம் பக்கம்)

## ட்ரம்ப் மீதான கொலை முயற்சி



### ஜனாதிபதி ரணில் கண்டனம்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீதான படுகொலை முயற்சி தொடர்பில் தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாக, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 06

## கொழும்பு கோட்டைப் பகுதியில் மனித எலும்புக்கூடு கண்டுபிடிப்பு

### துறைமுக பொலிஸார் விசாரணை

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு கோட்டை பழைய செயலக கட்டிடத்திற்கு அருகில் காணப்படும் சுற்றுவட்டத்திற்கு மத்தியில் அகழ்வு நடவடிக்கைகளின் போது மனித எலும்புக்கூடு ஒன்று காணப்பட்டதாக கொழும்பு துறைமுக பொலிஸார் 06

## வரலாற்று முக்கிய தீகவாபி தூபியில் நினைவுச் சின்னங்கள், பொக்கிஷங்கள்

### ஜனாதிபதி பங்கேற்புடன் சிறப்பாக இடம்பெற்றது



வரலாற்றுச் சிறப்புமிக்க தீகவாபி தூபிக்குள் புனித தாது, பொக்கிஷங்கள் என்பவற்றை வைக்கும் நிகழ்வு நேற்று (14) காலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பங்களிப்புடன் நடைபெற்றது.

இலங்கையின் நான்காவது பெரிய தூபிகளில் ஒன்றான தீகவாபியை புனரமைக்கும் பணிகள் 2020 ஆம் ஆண்டு பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப் பட்டது.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்திற்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் 06

## இலங்கையர்களுக்கு இன்று முதல்
## தாய்லாந்து நாட்டுக்கு விசா இன்றி செல்ல அனுமதி

இலங்கை உட்பட 93 நாடுகள் மற்றும் பிரதேசங்களில் இருந்து வரும் பயணிகளுக்கு தாய்லாந்தில் இன்று 15ஆம் திகதி முதல் வீசா இன்றி நுழைய அனுமதி 06

## அரிசி இறக்குமதிக்கு எந்த அவசியமும் இல்லை

### முட்டை, கோழி இறைச்சியும் தாராளமாக உள்ளது



நாட்டிற்கு அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லையென விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் கோழி இறைச்சி மற்றும் 06

## நாட்டை மீட்டெடுக்க உதவினால்
# சஜித்தின் தடை செய்யப்பட்டுள்ள ஐதேக அங்கத்துவத்தை வழங்குவேன்
### ஐ.ம.ச. கட்சியுடன் இணைந்து ஊழலுக்கு எதிராக போராடத் தயார்

**ஒரு நிபந்தனை, சஜித் பிரேமதாச பாடசாலைகளுக்கு வழங்கும் பஸ்களுக்கு பணம் வழங்கியது யார் என்பதை அவர் வெளிப்படுத்த வேண்டும்**

**கண்டியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க**

சஜித் பிரேமதாச நாட்டைப் பாதுகாப்பதற்கு தமக்கு ஒத்துழைப்பு வழங்குவாரானால் தடை செய்யப்பட்டுள்ள அவரது ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்துவத்தை மீண்டும் வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டியில் தெரிவித்துள்ளார். நாட்டை தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து 06




## டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு

### காதில் காயம்; சந்தேக நபர் சுட்டுக்கொலை



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், அமெரிக்க நேரப்படி நேற்றுமுன்தினம் மாலை பென்சில்வேனியாவில் நடைபெற்ற பிரசாரப் பொதுக்கூட்டத்தின் போது படுகொலை முயற்சியில் இருந்து மயிரிழையில் உயிர்தப்பினார்.

பிரசாரப் பொதுக்கூட்ட மேடையில் வைத்து அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. முதலாவது துப்பாக்கிச் சூட்டில் ட்ரம்பின் வலது காதை உரசியபடி 06

### அரசாங்கத்தின் வருமானம் அதிகரிப்பு
## 2023 முதல் 4 மாதத்தோடு ஒப்பிடுகையில் இவ்வருட 4 மாதத்தில் 43.3% அதிகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



2023ஆம் ஆண்டு முதல் நான்கு மாதத்தில் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள வருமானத்தோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதத்தில் அரசாங்கத்தின் வருமானம் 43. 3 வீதமாக அதிகரித்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு முதல் நான்கு மாதத்தில் அரசாங்கத்திற்கு கிடைத்த வருமானம் 06

## நாட்டின் கரையோரத்தை சுற்றிய நடைப் பயணம்

### பேருவளை சஹ்மி ஷஹீதின் சாதனைப்பயணம் ஆரம்பம்




பேருவளை விசேட நிருபர்

பேருவளையில் துவங்கி, இலங்கையை கரையோரமாக நடந்தே சுற்றிவந்து சாதனை படைக்கும் நோக்குடன், பேருவளையைச் சேர்ந்த யூடியூபர் சஹ்மி ஷஹீத், நேற்று முன்தினம் (13) தனது சாதனைப் பயணத்தை ஆரம்பித்தார்.

சஹ்மி ஷஹீத், பிக் சிட்டி குழுமத்தின் ஸ்தாபகர் தொழிலதிபர் இஜ்லான் ஹாஜியுடன் இணைந்து, பிரதேச இளைஞர்கள், வர்த்தகர் 06

## சமுர்த்தி வங்கி ஊடாக 'அஸ்வெசும' கடன் திட்டம்

### இம்மாதம் முதல் ஆரம்பம் -அமைச்சர் பெஸ்குவல்

லோரன்ஸ் செல்வநாயகம்



சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் மூலம் புதிய கடன் திட்டம் ஒன்றை இந்த மாதத்திற்குள் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் தெரிவித்துள்ளார். சமுர்த்தி அபிவிருத்தி வங்கியின் ஊடாக அஸ்வெசும கடன் திட்டமே இவ்வாறு இந்த 06

### 2024 ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ்
## 1,16,000 மாணவருக்கு புலமைப் பரிசில்கள்
### A/L மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்க ரூ. 824 மில். ஒதுக்கீடு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் எண்ணக் கருவிற்கிணங்க பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்த நடைமுறைப்படுத்தப்படும் "ஜனாதிபதி புலமைப் பரிசில்" திட்டத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டில்



116,000 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

க.பொ.த. உயர்தரம் கற்கும் 6,000 மாணவர்களுக்கு மாதாந்தம் ரூ.6,000 வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும் புலமைப் 06



03
## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான மனு
நீதிபதிகள் குழாம் முன் இன்று பரிசீலனை



03
## இஸ்ரேலில் ஏவுகணைக்கு இலங்கையர் காயம்
ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளதாக தகவல்

## தமிழ் தேசிய கூட்டணியின் தேசிய மாநாடு யாழில்





தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் நடாத்த ஏற்பாடாகியுள்ளது. யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் எதிர்வரும் 21ஆம் திகதி பி.ப 3 மணிக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தேசிய 06

## முச்சக்கர வண்டிகளின் கட்டணம் குறைகிறது

### மேல் மாகாணத்தில் இன்று முதல் அமுல்

லோரன்ஸ் செல்வநாயகம்

மேல் மாகாணத்தில் இன்று முதல் முச்சக்கர வண்டிகளுக்கான கட்டணங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க இரண்டாவது கிலோ மீற்றருக்கு இதுவரை அறவிடப்பட்ட 100 06



## நாட்டின் வாகன விபத்தினால் ஒரே நாளில் ஐவர் பலி

### பலர் காயங்களுக்குள்ளாகினர்

லோரன்ஸ் செல்வநாயகம்




நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்றுள்ள வீதி விபத்துக்களில் 05 பேர் உயிரிழந்துள்ளதுடன் சிலர் காயமடைந்துள்ளனர். அது தொடர்பில் பொலிசார் தெரிவிக்கையில்; அத்தனகல்ல, லுணுகம்வெஹெர, கிரிவுல்ல மற்றும் அம்பலாங்கொடை 06

## நேபாளத்தில் புதிய அரசு இன்று பதவியேற்கிறது

### புதிய பிரதமராகிறார் K.P சர்மா ஒலி



நேபாளத்தில் புதிய அரசு இன்று பதவியேற்கவுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

நேபாளத்தின் புதிய பிரதமராக கே.பி.சர்மா ஒலி (KP Sharma Oli) இன்று (15) ஜனாதிபதி ராம் சந்திர பவுடலால் நியமிக்கப்படவுள்ளார். அதன்படி, இன்று காலை புதிய பிரதமரும், அமைச்சர்களும் பதவியேற்கவுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. 06

# இலங்கையில் முதலிட பயமின்றி வாருங்கள்

## புலம்பெயர் சமூகத்திற்கு மனுஷ அழைப்பு

நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழுகின்ற எமது புலம்பெயர் சமூகம், இலங்கை வந்து முதலீடு செய்து நாட்டை அபிவிருத்தி செய்ய ஆவலுடன் காத்திருக்கின்றனர். கிளிநொச்சியில் உள்ள பெரும்பாலான வர்த்தக நிறுவனங்கள் புலம்பெயர் மக்களுடையது. அந்த புலம்பெயர் மக்களை நாட்டுக்கு திரும்பி வருமாறு அழைப்பு விடுப்பதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். இங்கு காணிப்பிரச்சினைகள் தற்போது தீர்க்கப்பட்டு, தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் இனப்பிரச்சினைகள் காணாமல் போகும் சூழலை உருவாக்கியுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டுக்காக நாம் ஒன்றுபட வேண்டிய நேரம் இது. இனம், மதம், சாதி, கட்சிகளை ஒதுக்கி வைக்க வேண்டிய நேரம் இது. நம் நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய நேரம் இது. எனவே, இலங்கையுடன் ஒன்றிணைந்து எமது நாட்டை கட்டியெழுப்புமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.



கிளிநொச்சி ஜெயகமு ஸ்ரீலங்கா' மாவட்ட நடமாடும் நிகழ்ச்சியின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியான 'ஸ்மார்ட் யூத் கிளப்' பேரவையில் நேற்று முன்தினம் (13) உரையாற்றும் போதே தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

12 பில்லியன் டொலர்களை நாட்டிற்கு அனுப்பிய வெளிநாட்டு ஊழியர்களே நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளதாக தெரிவித்த அமைச்சர்,

சர்வதேச வர்த்தகரான எலோன் மஸ்க்கிற்கு இலங்கையில் தொழில் தொடங்குவதற்கு ஜனாதிபதி ஆரம்ப அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டு மக்கள் வெளி நாட்டிற்குச் சென்று, பணம் சம்பாதித்து, அறிவுடன் அனுபவத்தைக் கொண்டு, இலங்கையில் நல்ல தொழில்முனைவோராக மாற வேண்டும்.

நீங்கள் எப்போதும் நாட்டில் இருக்க வேண்டியதில்லை. நாட்டிற்கு செல்ல விரும்புபவர்களுக்கு தேவையான அனைத்து பொருட்களுடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மாகாண அலுவலகம் இன்று திறந்துவைக்கப்படுவது பற்றிய நல்ல செய்தியை இன்று கொண்டு வந்துள்ளோம்.

உலகில் நாம் எங்கு வாழ்ந்தாலும், நமக்கு இருக்கும் சுதந்திரம், அங்கீகாரம், மரியாதை நம் நாட்டில் கிடைப்பது போன்று, வேறு எங்கும் கிடைக்காது. ஆனால் எங்கேயும் போய் வேலையை செய்தாலும் ,நம் நாடு அழகானது என்ற உணர்வு இருந்து கொண்டே இருக்கும்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு எங்களுக்கு பிரதான பிரச்சினையாக இருந்த ஆனால் எமது புலம்பெயர் தொழிலாளர்கள் 12 பில்லியன் டொலர்களை எமக்கு அனுப்பி வைத்தன் மூலம் எம்மால் பொருளாதாரத்தில் இருந்து மீள முடிந்தது.

நாட்டை முன்னேற்ற இளம் தலைமுறையினர் முதலீட்டாளர்களாக உருவாக வேண்டும்.

எப்போதும் எதிர்மறையாகவே சிந்திக்கும் சில அரசியல் தலைவர்களின் விடயங்களில் சிக்கிக் கொள்ளாமல் எப்போதும் நேர்மறையாக சிந்திக்கும் இளம் தலைமுறையினர் தான் தற்போது எமக்கு தேவை.

# மாத்தளையில் ஜனாதிபதி புலமைப்பரிசில் நிகழ்வு





பாடசாலையில் தரம் 1 முதல் 11 வரை கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சம் மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதி மூலம் புலமைப் பரிசில் உதவித் தொகை வழங்கும் தேசிய வேலைத் திட்டம் மாத்தளை எட்வர்ட் பார்க் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் (13) இடம்பெற்றது. மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாத்தளை மாவட்டத்தில் கலேவல, நாவுல,வில்கமுவ, மாத்தளை ஆகிய கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 3134 மாணவர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபாய் என்ற அடிப்படையில் ஒரு வருடத்திற்கான புலமைப் பரிசில் நிதி வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் விளையாட்டு துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோகண திஸாநாயக்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான நாலக கோட்டகொட மற்றும் மாத்தளை மாவட்ட செயலாளர் திஜானி திலகரத்ன, வலய கல்வி பணிப்பாளர்கள், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

**(படம் மாத்தளை சுழற்சி நிருபர்)**

பூஜை வழிபாடு என்ற பெயரில்

# புதையல் தோண்டிய ஐவர் எகொடபிட்டியவில் கைது

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

கருவலகஸ்வெவ எகொடபிட்டிய பிரதேசத்தில் ஆயிரம் வருடங்கள் பழமையான தூபியொன்றுக்குள் விளக்கு ஏற்றி பூஜை செய்த பின்னர் புதையல் தோண்டுவதற்கு முயற்சி செய்த 5 சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் (13) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கருவலகஸ்வெவ வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கருவலகஸ்வெவ பொலிஸ் உத்தியோகத்தர்களும், வனவிலங்கு அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது 65 வயதுக்கு மேற்பட்ட சந்தேக நபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் எனவும் கூறப்படுகிறது

# சிறினிவாஸ வீதிக்கு காபட்





பேருவளை நகர சபை பிரதேசத்திற்குட்பட்ட சிறினிவாஸ வீதிக்கு பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீலின் நிதியொதுக்கீட்டில் காபட் இடும் பணிகள் நேற்று (14) காலை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினரின் சகோதரரும் இணைப்பாளருமான அஸாம் பளீல் இதனை நேற்று ஆரம்பித்து வைத்தார். பிரதேசத்தின் சமூக சேவையாளர் பர்ஸான் அன்வர் உட்பட பிரதேச மக்களும் கலந்துகொண்டுள்ளதை படங்களில் காணலாம்.

# பொருளாதார முக்கியத்துவம் மிக்க பாசிக்குடா முனை முருகன் கோவில் வீதி கையளிப்பு

**பாசிக்குடா நிருபர்**

பொருளாதார முக்கியத்துவம் மிக்க பாசிக்குடா முனை முருகன் கோவில் வீதியானது போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மற்றும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோரினால் வைபவ ரீதியாக சனிக்கிழமையன்று (13) திறந்து வைக்கப்பட்டது.

இவ் வீதியானது 1.54 கிலோமீற்றர் தூரமுடைய பிரதான வீதியாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறவுள்ள வீதிகள் அபிவிருத்தி உட்பட பல்வேறு அபிவிருத்தி திட்ட நிகழ்வுகளில் பங்கு பற்றும் முகமாக வருகை தந்த அமைச்சர் நிகழ்வில் முதன் நிகழ்வாக இவ் வீதியினை திறந்து மக்கள் பாவனைக்குக் கையளித்தார்.



அமைச்சர் வீதியினை திறந்து வைத்ததுடன் அவ் வீதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான முனைமுருகன் ஆலயத்திற்கு சென்று முருகனை தரிசித்ததுடன் நினைவாக மரக் கன்றுகள் நடுகை செய்து மக்கள் சந்திப்பினையும் மேற்கொண்டிருந்தார். குறித்த வீதியானது கடந்த 30 வருடகால யுத்தத்தினால் மக்கள் பாவனைக்கு பயன்படாத நிலை காணப்பட்டது.

அத்துடன் வீதியானது நீண்டகாலமாக புனருத்தாரனம் செய்யப்படாமல் குண்டும்,குழியுமாக காணப்பட்டதுடன் வெள்ளகாலங்களில் நீர் தேங்கி வழிந்தோட முடியாமல் முற்றிலும் போக்குவரத்தினை மேற்கொள்ள முடியாத நிலையில் சேறும் சகதியுமாய் காணப்பட்டது.

இவ் வீதியின் வழியே ஆலயத்திற்கு வழிபடச் செல்வோர், மீன்பிடித் தொழிலுக்கு செல்வோர் மற்றும் சுற்றுலா பயணிகள் என பலரும் தங்களது போக்குவரத்தினை மேற்கொள்வதில் பல்வேறு பட்ட அசௌகரியங்களை அனுபவித்து வந்தனர். இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் எடுத்த துரித முயற்சியினால் இவ் வீதி புனருத்தாரனம் செய்யப்பட்டு மக்கள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்

## புதுக்குடியிருப்பில் விபத்து

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**



மண்முனைப்பற்று புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எரிபொருள் நிரப்பும் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று (14) அதிகாலை 3 30 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த எரிபொருள் நிரப்பும் வாகனம் புதுக்குடியிருப்பில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீட்டு மதில் ( சுவர்) மீது மோதியதுடன் பிரதான வாயில் கதவு மற்றும் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஆகியவற்றுக்கும் சேதம் விளைவித்துள்ளது.

# கல்முனை ஸாஹிராவில் 06 கோடி செலவில் மூன்று மாடிக் கட்டிடம்

**சாய்ந்தமருது விசேட நிருபர்**

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் ஆறு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள கேட்போர் கூடம் உள்ளிட்ட மூன்று மாடி வகுப்பறைக் கட்டிடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு வியாழக்கிழமை (11) இடம்பெற்றது.



கல்லூரி அதிபர் எம்.ஐ. எம். ஜாபீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக்க அபேவிக்கிரம, கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ. லியாக்கத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், அம்பாறை மாவட்ட பொறியியலாளர் ஏ.எம். ஸாஹிர் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம். எம். ஹரீஸ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் கல்வி அமைச்சினால் மேற்படி வேலைத் திட்டத்திற்கு 06 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆரையம்பதியில் போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

ஆரையம்பதியில் போதைவஸ்துக்கு எதிரான விழிப்புணர்வு பேரணி ஒன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது

அகில இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் 210 வது ஆண்டு நிறைவையொட்டி ஆரையம்பதி மெதடிஸ்த திருச் சபையினால் இந்த விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.



போதைவஸ்துக்கு எதிரான இந்தப் பேரணி ஆரையம்பதி மெதடிஸ்த திருச்சபை முன்றலில் ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக நாலாம் கட்டை ஐந்தாம் கட்டை ஊடாக சென்று மீண்டும் ஆரையும்பதி மெதடிஸ்த திருச்சபையை சென்றடைந்தது.

பேரணியில் சென்றோர் போதைவஸ்தினால் ஏற்படும் பாதிப்புகள், போதை வஸ்து பாவையினால் ஏற்படும் பாதிப்புகள், சமூக சீரழிவுகள் போன்றவைகள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறு பேரணியில் சென்றனர்.

இந்தப் பேரணியில் ஆரையம்பதி மெதடிஸ்த திருச்சபையின். குரு வானவர் அருட்தந்தை வினோத், வடக்கு கிழக்கு மாகாண சமூக நலன் பிரிவுக்கான இணைப்பாளர் எஸ். சசீகரன், மண்முனைப் பற்று பல் சமய ஒன்றிய தலைவர் ஆதம். காத்தான்குடி பொலிஸ் நிலைய சிவில் சமூக பொறுப்பதிகாரி ஜவாஹிர் உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர்கள், திருச்சபையின் உறுப்பினர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தினகரன் THINAKARAN தினகரன்
2024 ஜூலை 15 திங்கட்கிழமை



தொழுகை நேரம்
சுபஹ் - 04.39
லுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆனி 31
ராகுகாலம் : காலை : 7.30 - 9.00வரை
சுபநேரம் : பகல் : 12.00 - 1.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# சேருவில ரஜமஹா விகாரையின் வீதி கார்பட் வீதியாக புனரமைப்பு

## அமைச்சர் பந்துல குணவர்தனவினால் திறந்து வைப்பு

வரலாற்றுச் சிறப்புமிக்க சேருவில மங்கள ரஜமஹா விகாரையின் பெரஹெர மாவத்தை போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் கார்பட் இடப்பட்டு புனரமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க சேருவில மங்கள ரஜமஹா விகாரையைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய சுபோதி நாயக்க ஸ்தவிரயனின் வேண்டுகோளுக்கு இணங்க, கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனின் ஆலோசனைக்கமைய கிராம வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இவ் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி நவீனமயமாக்கப்பட்டதன் மூலம், விகாரைக்கு வரும் பக்தர்கள் தங்களது போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது.



"இந்நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன;

“தீவு முழுவதிலுமிருந்து வரும் சிங்கள, தமிழ் , முஸ்லிம் யாத்ரீகர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க சேருவில விகாரைக்கு இலகுவாகப் பயணிக்கக் கூடிய வகையில் இவ் வீதியை அபிவிருத்தி செய்வதில் அமைச்சர் என்ற வகையில் நான் மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு நீண்ட காலமாக யுத்தத்திற்கு முகம் கொடுத்ததுடன், மூன்றில் இரண்டு பங்கு நிலப்பரப்பும், பல உயிர்களும், உடமைகளும் அழிந்தன. இவை அனைத்தும் தேசத்திற்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அனைத்து மக்களும் அவர்கள் விரும்பிய இடத்தில் வாழவும் வாழ்வாதாரத்தை உருவாக்கவும்

06

## இறைவரித் திணைக்களத்தில் பயிற்சியாளர்களுக்கு சந்தர்ப்பம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 150 பயிற்சியாளர்களை 6 மாத காலப் பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளவுள்ளது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழக இறுதியாண்டு கல்வி மாணவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் மற்றும் கணினி கல்வியறிவு இதற்கு அடிப்படைத் தகுதியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு ரூ.1500 கொடுப்பனவை வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு தபால் மூலமாகவோ அல்லது cgir.office@ird.gov.lk என்ற மின்னஞ்சல் மூலமாகவோ எதிர்வரும் 31.07.2024 க்கு முன் பல்கலைக்கழக பீடாதிபதியினால் உறுதி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

# வங்காள விரிகுடாவில் கொந்தளிப்பான நிலை

## மீனவர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை



கடற்றொழிலாளர்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் (Department of Meteorology) அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளது. அதன்படி மறு அறிவித்தல் வரை வங்காள விரிகுடா (Bay of Bengal) மற்றும் அரபிக் கடலைச் (Arabian Sea) சுற்றியுள்ள கடற்பரப்பிற்கு கடற்றொழிலாளர்கள் செல்ல வேண்டாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த கடற்பரப்புகளில் காற்று மணித்தியாலத்துக்கு 70 - 80 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இதன்போது கடற்பரப்புகள் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாகக் கடற்றொழிலாளர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் அராஜக நிலையை தோற்றுவிக்கவே சில தொழிற்சங்கங்கள் செயற்படுகின்றன

## ஐ.தே.க இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் ஆனந்தகுமார்



சில தொழிற்சங்கங்கள் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபட்டு நாட்டில் அராஜக நிலையை தோற்றுவிப்பதற்கு முற்படுகின்றன. இத்தகைய தொழிற்சங்கங்களின் போராட்டம் தொடர்பில் மக்கள் விழிப்பாகவே இருக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை உணர்ந்து, நாட்டை மீட்டெடுக்கும் பயணத்துக்கு அனைத்து தொழிற்சங்கங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும், சம்பள உயர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் 2025 வரவு – செலவுத் திட்டத்தில் நிச்சயம் தீர்வு கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் சுப்பையா ஆனந்தகுமார் மேலும் கூறியதாவது,

நாட்டு மக்கள் நெருக்கடியை எதிர்கொண்டுவரும் வேளையில் தொழிற்சங்க போராட்டம் என்ற போர்வையில் மக்களை பணயக் கைதிகளாக சில தொழிற்சங்கங்கள் பயன்படுத்தி வருகின்றன. இது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. இத்தகைய தொழிற்சங்கங்கள் அரசியல் தேவைகளை பூர்த்தி செய்யவே முற்படுகின்றன.

சில தொழிற்சங்கங்கள் கோரும் கொடுப்பனவை வழங்க வேண்டுமெனில் வற் வரியையே அதிகரிக்க நேரிடும். தற்போதுள்ள 18 வீத வரியே அதிகம். அதனை 21 வீதமாக்கினால் என்ன நடக்கும்? எனவே, மக்கள் மீது சுமைகளை திணிக்கும் வகையிலான முடிவுகளை எடுப்பதற்கு எமது ஜனாதிபதி தயாரில்லை.

அரச ஊழியர்களுக்கு ஏற்கனவே சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. எனவே, 2025 பட்ஜட்டில் அடுத்த கட்ட நடவடிக்கை இடம்பெறும் என அரசாங்க தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. எனவே, நாட்டின் நலன்கருதி தொழிற்சங்கங்களும் விட்டுக்கொடுப்புடன் செயற்பட முன்வரவேண்டும். மாறாக நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்த முற்பட்டால் சுற்றுலா, வெளிநாட்டு முதலீடுகள் உள்ளிட்ட விடயங்களிலும் அது தாக்கத்தை செலுத்தக்கூடும்.

அதேவேளை, மலையக பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்குசம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கு தம்மால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுத்துள்து. குறிப்பாக சம்பள உயர்வை வழங்க மறுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களின் குத்தகை ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கான ஏற்பாடுகளும் இடம்பெற்றுவருகின்றன. எனவே, மலையக மறுமலர்ச்சியில் ஜனாதிபதி அதிக அக்கறை கொண்டுள்ளார்.

அதேபோல வடக்கு, கிழக்கு அபிவிருத்தி சம்பந்தமாகவும் கூடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. எனவே, இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதே சிறந்த தேர்வாக அமையும் என்றார்.

# ஜனாதிபதி தேர்தல் தொடர்பான மனு

## நீதிபதிகள் குழாம் முன் இன்று பரிசீலனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி தேர்தலை தடை செய்யும் வகையில் சட்டத்தரணி ஒருவரினால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான பரிசீலணையை இன்று மேற் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணியான அருண லக்சிறி உனவட்டுன என்பவரே இந்த அடிப்படை உரிமைகள் மனுவை தாக்கல் செய்துள்ளதுடன் அந்த மனுவை பிரதம நீதியரசர் உள்ளிட்ட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இன்று பரிசீலிக்கத் தீர்மானித்துள்ளது. 19 வது அரசியலமைப்புத் திருத்தம் முறையாக நிறைவேற்றப்படவில்லை



06

# இஸ்ரேலில் ஏவுகணைக்கு இலங்கையர் படுகாயம்

## ஆஸ்பத்திரியில் அனுமதித்துள்ளதாக தகவல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையிலிருந்து சென்று இஸ்ரேலில் தொழில் புரியும் ஒருவர் ஏவுகணை எதிர்ப்பு அமைப்பினால் தாக்கியழிக்கப்பட்ட ஏவுகணையின் ஒரு பாகம் தாக்கியதில் காயமடைந்துள்ளதாக இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதுவ ராலயம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார உறுதிப்படுத்தியுள்ளதுடன் அவ்வாறு காயமடைந்தவர் வடக்கு இஸ்ரேலில் லெபனான் எல்லைக்கு அருகில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இலங்கையராவர் என்றும் தெரிவித்துள்ளார்.

06

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சூரிய சக்தி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு கடன் உதவிகளை வழங்குதல்







அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் அமைச்சின் கீழ் உள்ள, உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற,
உள்ளூராட்சி நிறுவனங்களது சூரியசக்தி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு சலுகைக் கடன் உதவிகளை வழங்குதல்.
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்
கௌரவ ஜானக வக்கும்புர அவர்கள்
உள்ளிட்ட
அமைச்சர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களது
பிரதிநிதிகள் மற்றும் பிரமுகர்களது பங்களிப்புடன்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதமர்
கௌரவ தினேஷ் குணவர்தன அவர்களது
அழைப்பின்பேரில்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி
கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களது
தலைமையில்
2024 ஜூலை 15ஆந் திகதி
அலரி மாளிகையில்.



உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியமானது, 1916ஆம் ஆண்டு 22ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட, அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் அமைச்சின் கீழ் செயற்படுகின்ற, ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது பொதுப்பயன்பாடுகள் சேவைகளை வழங்குவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளது அபிவிருத்தி மற்றும் வருமானமீட்டும் கருத்திட்டங்களில் முதலீடு செய்வதற்குத் தேவையான நிதியை, சலுகைக் கடன் அடிப்படையில் வழங்குதல் மற்றும் அக்கடன் தொகை மற்றும் அதற்குரிய சலுகைரீதியான வட்டியை மீள அறவிட்டு, அதன் ஊடாக உள்ளூராட்சி நிறுவனங்களது மூலதன அடிப்படையிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு மீண்டும் மீண்டும் கடன்களை வழங்குதல் ஊடாக, அந்நிறுவனங்களில் வலுவானதொரு ஐந்தொகையை கட்டியெழுப்புவதற்குரிய ஒரு நிதி நிறுவனமாக செயற்படுதல், இந்நிதியத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம்
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 31ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 08

### குறள் தரும் சிந்தனை

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்

நடுவுநிலைமை தவறிச் செயல்படலாம் என்று ஒரு நினைப்பு ஒருவனுக்கு வந்து விடுமானால் அவன் கெட்டொழியப் போகிறான் என்று அவனுக்கே தெரியவேண்டும்.

## நாட்டின் தொழிற்சங்கங்கள் கொண்டுள்ள பொறுப்பு

பொருளாதார ரீதியில் நம்பிக்கை அளிக்கும் வகையில் நாடு முன்னேற்றப் பாதையில் பயணிக்கின்றது. பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார வேலைத்திட்டங்களின் பயனாக இவ்வாறான அடைவை குறுகிய காலப்பகுதிக்குள் அடைந்து கொள்ள முடிந்திருக்கிறது.

அதன் பயனாக 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாட்டில் நிலவிய நெருக்கடிகளும் அசௌகரியங்களும் தற்போது முற்றிலும் நீங்கியுள்ளன. இந்நிலை நீடித்து நிலைக்க வேண்டும் என்பதுதான் அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும். மீண்டுமொரு தடவை நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட இடமளிக்கக்கூடாது என்பதில் மக்கள் உறுதியாக உள்ளனர்.

அதனால் பொருளாதார ரீதியில் நெருக்கடி அற்ற வாழ்வை அனுபவிப்பதற்கு பொருளாதாரம் தொடர்ந்தும் முன்னேற்றப்பாதையில் பயணிக்க வேண்டும். அதன் நிமித்தம் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் அனைத்துத் தரப்பினரும் ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்குவது அவசியம். பொருளாதாரம் பலமாகவும் உறுதியாகவும் இருக்கும் போதுதான் பொருளாதார ரீதியில் நெருக்கடி அற்ற வாழ்வை மக்களால் அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

அதனால் இந்நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்பட எவரும் துணைபோகத் தயாராக இல்லை. கடந்த பொருளாதார வீழ்ச்சியின் போது நாடும் மக்களும் முகம்கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் அவ்வாறான அனுபவங்களைப் பெற்றுக்கொடுத்து இருக்கின்றன. அந்த அனுபவங்கள் அவ்வளவு இலகுவாக மறந்து விடக்கூடியவையும அல்ல.

அதன் காரணத்தினால் நாட்டையும் மக்களையும் முன்னிலைப்படுத்தி பொருளாதார மேம்பாட்டுக்காக உழைப்பதும் அதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுககு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவதும் ஒவ்வொரு குடிமகனினதும் பொறுப்பாகும். இப்பொறுப்பில் இருந்து தொழிற்சங்கங்களும் தவிர்ந்து கொள்ள முடியாது. அதுவே மக்களின் கருத்தாகும்.

இவ்வாறான சூழலில் சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதானது பொருளாதாரத்தை சீர்குலைப்பதற்கான முயற்சியாகவும் நடவடிக்கையாகவும் அமையும்.

தற்போதைய சூழலில் தொழிற்சங்க நடவடிக்கைகளையோ, வேலைநிறுத்தங்களையோ முன்னெடுப்பதற்கு சாதகமான சூழலில் நாட்டின் பொருளாதாரம் இல்லை. கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி மீட்சி பெற்றுள்ள சூழலில் வேலை நிறுத்தங்களை முன்னெடுக்கும் போது பொருளாதாரம் மீண்டும் நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாக நேரிடும். அது நாட்டில் மீண்டும் பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தக்கூட துணை போக முடியும்.

அதனால்தான் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவினது பேராசிரியர் பிரியங்க துனுசிங்க, 'பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட்டு வரும் தற்போதைய சூழலில் வேலைநிறுத்தங்களை முன்னெடுப்பது நாட்டு செய்யும் பாரிய தீங்காக அமையும்' என்றுள்ளார்.

அது முற்றிலும் உண்மையான கூற்றாகும். பொருளாதார வீழ்ச்சியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று முன்னேற்றப்பாதையில் பயணிக்கும் நாட்டில் மீண்டும் நெருக்கடிகளை ஏற்படுத்திட இந் நடவடிக்கைகள் வழிவகுக்கும். அதன் விளைவாக மற்றொரு பொருளாதார நெருக்கடிக்கு நாடு உள்ளாவதைத் தவிர்க்க முடியாத நிலை ஏற்படும். அதனால்தான் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி செயற்படுமாறு அனைத்து தொழிற்சங்கங்களும் கோரப்படுகின்றன.

சில எதிர்க்கட்சிகள் தங்கள் அற்ப நலன்களை தொழிற்சங்கங்களைப் பயன்படுத்தி அடைந்து கொள்ள முயற்சிக்கலாம். ஆனால் தொழிற்சங்கங்களைத் தூண்டி விட்டு அற்ப அரசியல் இலாபம் தேடக்கூடிய காலம் இதுவல்ல. முன்னொரு போதும் இல்லாத வகையில் கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி தற்போது நாடு மீட்சி பெற்று முன்னேற்றப்பாதையில் செல்லத் தொடங்கியுள்ளது.

தற்போது ஜனாதிபதித் தேர்தலையும் நாடு எதிர்நோக்கியுள்ளது. கடந்த காலங்களில் இக்காலகட்டத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அக்காலங்களைப் போன்று தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய காலமும் இதுவல்ல. இன்றைய சூழலில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது நாடும் மக்களும் மீண்டும் பொருளாதார ரீதியில் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கவே நேரிடும்.

ஆகவே அவ்வாறான துரதிர்ஷ்ட நிலைக்கு நாடு மீண்டும் தள்ளப்பட எந்தவொரு குடிமகனும் தொழிற்சங்கமும் துணைபோகலாகாது. அது நாட்டுக்கும் மக்களுக்கும் செய்யும் பாரிய தீங்காக அமையும். அதனால் அரசியல் கட்சிகள் அற்ப நலன்களை அடைந்து கொள்ள தொழிற்சங்கங்கள் துணை போகலாகாது. மக்களின் விருப்பம் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk




# ரூபவாஹினி ஒளிப்பதிவின் போது உணர்வை வெளிப்படுத்திய மொஹிதீன் பேக் குடும்பத்தினர்!





நாளை செவ்வாய்க்கிழமை இரவு 10 மணிக்கு தேசிய தொலைக்காட்சியில் 'ரெவ் துன் கீ' இசை நிகழ்ச்சி ஒளிபரப்பப்படவுள்ளது. இந்த நிகழ்ச்சியை தேசிய ரூபவாஹினி மற்றும் தேசிய வானொலி இணைந்து வழங்குகின்றன.

இஸ்லாமிய பக்தராக இருந்தும், இந்நாட்டின் பிரஜையல்லாத அல்ஹாஜ் மொஹிதீன் பேக் சிங்கள பௌத்த பாடல்களில் முன்னணி வாய்ந்த பல பாடல்களைப் பாடியவர். உண்மையில், மொஹிதீன் பேக் இல்லாவிட்டால், இந்நாட்டில் பௌத்த பாடல் கலாசாரம் இவ்வளவு ஊட்டமாகவும் வண்ணமயமாகவும் இருந்திருக்காது.

பேக் ஒரு உண்மையான கலைஞர். அவர் இசை என்னும் உலகளாவிய மொழியை மட்டுமே கடைப்பிடித்தார். அவர் பிறப்பால் ஒரு முஸ்லிம். ஆனால் அவர் எல்லா மதத்தையும், எல்லா இனத்தையும் சமமாக மதித்த மனிதநேயவாதி. 'புத்தங் சரணங் கச்சாமி, சுவதே' என்றால் பேக் தான் நினைவுக்கு வருவார்.

அவர் பாடிய நூற்றுக்கணக்கான நேர்த்தியான பௌத்த பாடல்களில், இவையே மிகவும் பிரபலமானவை. அங்குலிமாலா என்ற இந்தியப் படத்திற்கு சிங்களத்தில் டப்பிங் செய்த பிறகு, பேக் மாஸ்டரால் சிங்களப் பாடலான புத்தங் சரணங் கச்சாமியை அசல் பாடலை விட வெற்றிகரமாகப் பாட முடிந்தது. இவர் இந்தியாவின் தமிழ்நாட்டின் சேலத்தில் பிறந்தார். தமிழ்நாட்டில் பிறந்திருந்தாலும் மாஸ்டரின் பரம்பரை ஹைதராபாத் மாநிலத்திலேயே வேரூன்றியுள்ளது.

நம் இசையைப் பற்றிப் பேசும்போது மறக்க முடியாத சகாப்த மனிதராக பேக் மாஸ்டரின் நினைவுகள் எண்ணற்றவை. மொஹிதீன் பேக் மாஸ்டரின் நினைவைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை (நாளை) இரவு 10 மணிக்கு தேசிய தொலைக்காட்சி மற்றும் தேசிய வானொலியில் ஒளிபரப்பப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியில் மொஹிதீன் பேக்கின் மகன் இஷாக் பேக் மற்றும் மகள் திருமதி மொய்னா பேகம் ஆகியோர் பாடல்களைப் பாடியுள்ளனர்.

'ரெவ் துன் கீ' என அழைக்கப்படும் இந்த நிகழ்ச்சி அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கருத்துக்கமைய ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பேராசிரியர் சுதந்த லியனகே மற்றும் இலங்கை வானொலி கூட்டுத்தாபனத்தின் தலைவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஹட்சன் சமரசிங்க ஆகியோர் வழங்குகின்றனர். நிகழ்ச்சியை நெறியாள்கை செய்பவர் சிரேஷ்ட ஊடகவியலாளர் நிலார் ஏ. காசிம் ஆவார். இந்த நிகழ்ச்சியை சுமித் திசாநாயக்க தயாரித்துள்ளார்.

வானொலி இசைக்குழு நிகழ்ச்சிக்கான இசையை வழங்குகிறது. மற்றும் நிகழ்ச்சி பார்வையாளர்களிடையே கலையரங்கில் நேரடியாக பதிவு செய்யப்பட்டது. அதற்காக வானொலி நிலைய ஆனந்த சமரகோன் கலையரங்கம் தெரிவு செய்யப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற இஷாக் பேக், தனது தந்தையைப் பற்றி மிகவும் உணர்ச்சிவசப்பட்டதோடு, மொஹிதீன் பேக் யார், அன்று அவர் சமூகத்தில் எப்படி நடந்து கொண்டார், அவரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது பற்றி கருத்துத் தெரிவித்தார்.

அதுதான் 'ரெவ் துன் கீ' நிகழ்ச்சியின் முக்கியத்துவம் அநேகமாக சமூகத்தில் பிரபலமான நபராக இருந்தாலும், பலருக்கு அவர்களின் வாழ்க்கை எப்படி அமைந்தது எனத் தெரியாது.

'தந்தையார் ரொம்பவும் உணர்வுபூர்வமானவர். ஏழ்மையில் எளிமையாக இருந்தவர். தந்தையார் கண் சத்திரசிகிச்சை செய்யப் போன நாள் ஞாபகம் இருக்கிறது. அன்றைய தினம் அறுவைச் சிகிச்சைக்குச் செல்லும் முன்னர் கடைசியாக வீட்டைப் பார்த்தார்.

"மிகவும் சிரமத்துடன் இந்த வீட்டை பறவைக் கூடு போல் அமைத்தேன். மகனே இதற்கு அப்பால் எதுவும் இல்லை. எனது பெயருக்கு களங்கம் வராமல் சமூகத்தில் நல்லவனாக வாழ்" என்று அப்பா அன்று சொன்னார். "கடைசி சிங்கள மகன் இருக்கும் வரை பயப்படாதே. அவர்கள் சாப்பாடு தருவார்கள்" என்றார்.

"அப்பா பெரிய பணக்காரர் இல்லை. வங்கிப் புத்தகத்தில் பணம் வைத்திருந்தவர் கூட இல்லை" என்று இஷாக் பேக் தன் தந்தையை நினைவுகூர்ந்தார். இப்படி மறைந்திருக்கும் பல நினைவுகளை காலத்தின் மணலில் புதைக்காமல், புதிய ரசிகர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு பெரும் ஆதரவை 'ரெவ் துன் கீ' நிகழ்ச்சி பெரும் உதவியாக இருக்கும்.

நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் தன் இதயத்திலிருந்து போற்றிப் பேணி வந்த பேக் மாஸ்டரைப் பற்றி இன்னும் பல சுவாரஸ்யமான மற்றும் உணர்ச்சிகரமான நினைவுகள் உள்ளன.

பேக் மாஸ்டர் பிறப்பிலேயே ஒரு மார்க்கப்பற்றுள்ள இஸ்லாமியர். ஆனால் அவர் அனைத்து மதங்களையும் மதித்தார். அதனால்தான் இஸ்லாமியரான மொஹிதீன் பேக் பௌத்த பாடல்களைப் பாடினார். ஒருமுறை அவரது இஸ்லாமிய நண்பர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள். 'நீங்கள் ஏன் பௌத்த பாடல்களைப் பாடுகிறீர்கள்?'. ஆனால், பேக் மாஸ்டர் தொடர்ந்து பௌத்த பாடல்களைப் பாடினார். அவர் தனது மத நம்பிக்கையை மிகவும் உயர்வாகக் கொண்டிருந்தார், எனவே அவர் ஒரு முஸ்லிமாக பல சந்தர்ப்பங்களில் மக்காவிற்கு புனித யாத்திரை செய்ய மிகவும் பொன்னான வாய்ப்பைப் பெற்றார். 'ரெவ் துன் கீ' நிகழ்ச்சியில், இதுபோன்ற சுவாரஸ்யமான நினைவுகள் மற்றும் உணர்ச்சிகரமான நினைவுகள் மற்றும் இதுவரை வெளிப்படாத மாஸ்டரின் நினைவுகள் உள்ளன.

அத்துடன் மாஸ்டர் பல யுகங்களாக பாடிய மறக்க முடியாத பல பாடல்களையும் செவ்வாய்க்கிழமை (நாளை) காண உங்களுக்கு வாய்ப்பு உள்ளது. இரவு 10 மணிக்கு தேசிய ரூபவாஹினியின் 'ரெவ் துன் கீ' நிகழ்ச்சிகளின் தொடரில் இதுவே முதல் நிகழ்ச்சியாகும். எதிர்காலத்தில் இது போன்ற பல நிகழ்ச்சிகளை இந்நாட்டு ரசிகர்கள் ரசிக்க வாய்ப்புக் கிடைக்கும்.

உதித்த குணவர்தன...
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# அமெரிக்க வரலாற்றில் இதுவரை ஜனாதிபதிகள் மூவர் படுகொலை!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்காகப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ட்ரம்ப் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பெரும் பரபரப்பைக் கிளப்பியுள்ள போதிலும், அமெரிக்காவில் இதுபோல ஜனாதிபதி அல்லது ஜனாதிபதி வேட்பாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடப்பது இது முதல்முறை இல்லை. அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் இந்த வருட இறுதியில் நடைபெறவிருக்கின்றது.

ஏற்கனவே பலமுறை இதுபோன்ற தாக்குதல்கள் அமெரிக்காவில் அரங்கேறியுள்ளன.

1981 இல் ரொனால்ட் ரீகன் ஜனாதிபதியாக இருந்தார். ரீகன் வோஷிங்டனில் உள்ள ஹில்டன் ஹோட்டலில் ஒரு நிகழ்வில் கலந்து கொண்டார். அங்கிருந்து புறப்படும் போது அவர் மீது ஜோன் ஹிங்க்லி ஜூனியர் என்பவர் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த ரீகன் 12 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்தார்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு அவரது செல்வாக்கு அதிகரித்தது. இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திய ஜோன் ஹிங்க்லி ஜூனியருக்கு கடந்த 2022இல் பிணை வழங்கப்பட்டது.

ஜெரால்ட் ஃபோர்ட் 1975 இல் ஜனாதிபதியாக இருந்தார். கடந்த 1975 செப்டம்பர் மாதம் கலிபோர்னியாவில் அவரை பெண்கள் அமைப்பினர் சிலர் கொலை செய்ய முயன்றனர். 17 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை அவர் மீது கொலை முயற்சி நடந்தது. இருப்பினும், அதிர்ஷ்டவசமாக அவர் இரண்டு சம்பவங்களில் இருந்தும் எந்தவொரு காயமும் இல்லாமல் உயிர்தப்பினார்.

ஜோர்ஜ் வோலஸ் 1972 இல் ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது மேரிலாந்தில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடந்த நிலையில், அவர் படுகாயமடைந்தார். இதனால் அவர் அதிபர் தேர்தலில் இருந்து விலக வேண்டி இருந்தது. பிரிவினைவாத சித்தாந்தம் கொண்ட நபரே இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரொபர்ட் எஃப்.கென்னடி என்பவர் 1968 இல் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜனநாயக கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்கிய ஜோன் எஃப். கென்னடியின் சகோதரான ரொபர்ட் எஃப். கென்னடி, கலிஃபோர்னியாவின் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள அம்பா சிடர் ஹோட்டலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். கறுப்பினத்தவர்கள் உரிமைகளுக்காகப் போராடிய தலைவர் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் கொல்லப்பட்ட இரண்டே மாதங்களில் இந்தப் படுகொலை நடந்தது. இது அரசியல் வட்டாரத்தில் மிக பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

அதற்கு முன்னதாக ஜோன் எஃப். கென்னடி 1963 இல் கொல்லப்பட்டார். அமெரிக்கா வ ரலாற்றில் நடந்த மிக மோசமான ப டுகொலை என்றால் அது ஜோன் எஃப். கென்னடி படுகொலை சம்பவம்தான். மனைவி ஜாக்கியுடன் வாகன பேரணியில் சென்ற ஜனாதிபதி கென்னடி சுட்டுக் கொலை செய்யப்பட்டார். சோவியத் யூனியனில் வசித்த முன்னாள் கடற்படை வீரர் லீ ஹார்வி ஓஸ்வால்ட் இந்த படுகொலை சம்பவத்தில் ஈடுபட்டதாக வழக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

அமெரிக்க அரசியலில் வன்முறை காலகட்டத்தைத் தொடங்கிய படுகொலை இது என்றே பலரும் குறிப்பிடுகிறார்கள்.

பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் மீது 1933 இல் படுகொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.ஜனாதிபதித்தேர்தலில் வென்ற ரூஸ்வெல்ட் மீது புளோரிடாவின் மியாமியில் படுகொலை முயற்சி சம்பவம் நடந்தது. இந்தச் சம்பவத்தில் அவர் காயமடையவில்லை. இருப்பினும், சிகாகோ மேயர் அன்டன் செர்மாக் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

தியோடர் ரூஸ்வெல்ட் 1912 இல் ட்ரம்பைப் போலவே, பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது மீது விஸ்கான்சினில் உள்ள மில்வாக்கியில் துப்பாக்கிச் சூடு நடந்தது. இதில் துப்பாக்கிக் குண்டு அவரது மார்பில் பாய்ந்துள்ளது. இதில் அவர் உயிர் பிழைத்த போதிலும், தனது வாழ்நாள் முழுவதும் அவரது மார்பில் தோட்டா இருந்தது. மேல் பொக்கெட்டில் அவர் வைத்திருந்த 50 பக்க கடதாசி மற்றும் கண்ணாடிதான் அவரது உயிரைக் காப்பாற்றி உள்ளது.

வில்லியம் மெக்கின்லி 1901 இல் ஜனாதிபதியாக இருந்த போது நியூயோர்க்கில் உள்ள பஃபேலோ பகுதியில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். அமெரிக்க அதிபர் படுகொலை செய்யப்பட்டது அது இரண்டாவது முறையாக இருந்தது.

ஆபிரகாம் லிங்கன் 1865 இல் கொல்லப்பட்டார். இந்தப் படுகொலை அமெரிக்க வரலாற்றில் கறுப்பு நாளாகப் பார்க்கப்படுகிறது. அமெரிக்க வரலாற்றில் முதல்முறையாக ஜனாதிபதி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாக அந்தக் கொலை அமைந்தது.

வோஷிங்டனில் உள்ள ஃபோர்ட் தியேட்டரில் நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஜோன் வில்க்ஸ் பூத் என்பவர் லிங்கனை படுகொலை செய்தார்.

மேற்படி ஜோன் வில்க்ஸ் துணை ஜனாதிபதி ஆண்ட்ரூ ஜோன்சன் மற்றும் உள்துறை செயலா ளர் வில்லியம் செவார்ட் ஆ கியோரையும் கொலை செய்யத் திட்டமிட்டிருந்தார். இருப்பினும், நல்வாய்ப்பாக அவர்களுக்கு எதுவும் ஏற்படவில்லை.







**ஜனாதிபதிகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்கள் மீதான கொலை முயற்சிகள் ஏராளம்!**

## மானுடவியல்



172

இருக்கு நாளிலே, சீர்காழியிற் பிராமணர்கள், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைக் காணல்வேண்டும் என்னும் ஆசை செலுத்த, திருவீழிமிழலையை அடைந்து, தங்களை எதிர்கொண்ட அவ்வூர்ப் பிராமணர்களோடு திருக்கோயிலிலே போய்ச் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு, அந்நாயனார் எழுந்தருளியிருக்குந் திருமடத்திற்சென்று அவரை நமஸ்கரித்து, "சுவாமி! தேவரீர் அடியேங்களோடு சீர்காழிக்கு எழுந்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். பிள்ளையார் அது கேட்டு, "மிகநன்று. இன்று கழித்துத் திருவீழிமிழலையில் வீற்றிருக்கும் கடவுளுடைய அருளைப்பெற்றுக் கொண்டு, திருத்தோணியப்பரை வணங்குதற்கு உங்களோடு வருவேன்" என்றார். சீர்காழிப் பிராமணர்களுக்குத் திருவீழிமிழலைப் பிராமணர்கள் விருந்து செய்தார்கள். தோணியப்பர் அன்றிரவு பிள்ளையாருக்குச் சொப்பனத்திலே தோண்றி, "நாம் திருத்தோணியில் வீற்றிருக்குங் கோலத்தை இத்திருவீழிமிழலையிலே உள்ள விண்ணிழிந்த விமானத்திலே காட்டுவோம்; காண்" என்று சொல்லி மறைந்தருளினார். பிள்ளையார் விழித்து எழுந்து, திருக்கோயிலிற் சென்று, அங்கே சுவாமியைத் தாம் முன்னே திருத்தோணியிற் கண்டபடியே கண்டு, திருவுளமகிழ்ந்து, "மைம்மருபூங்குழல்" என்னும் வினாவுரைப்பதிகம் பாடிப் போந்து சீர்காழிப் பிராமணர்களை நோக்கி, "திருத்தோணியப்பர் தாம் வீற்றிருக்கும் ஸ்தலங்களெங்ஞ்சென்று தரிசித்துத் திருப்பதிகம் பாடி வருதலின் மேற்கொண்ட என்விருப்பத்தைக் கண்டு, தாம் அங்கே அமர்ந்த திருக்கோலத்தை இங்கே எனக்குக் காட்டியருளினார். நீங்கள் சீர்காழிக்குப் போங்கள்" என்றார். அதைக் கேட்ட பிராமணர்கள் சீர்காழிக்குப் போய்விட்டார்கள்.

பிள்ளையார் அப்பமூர்த்தியோடும் சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு திருவீழிமிழலையில் இருக்குநாளிலே, மழையின்மையாலும் காவேரிப்பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டாக; அதனால் உயிர்களெல்லாம் வருத்தமுற்றன. சிவனடியார்களையும் பசிநோய் வருத்திற்று. அது கண்டு பாலறாவாயராகிய பிள்ளையாரும் அப்பமூர்த்தியும் "சிவபெருமானது விபூதியைத் தரித்த அடியார்களுக்கும் கவலை வருமோ" எனத் திருவுளமிரங்கி, பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டு, அன்றிரவு துயின்றார்கள்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
குு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# ஐயப்ப தேவஸ்தானத்தின் தீர்த்தவாரி தேர் திருவிழா 2024

கொழும்பு 15 அழுத்மாவத்தையில் அமைந்திருக்கும் அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தின் வருடாந்த தீர்த்த வாரி தேர் திருவிழா எதிர்வரும் குரோதி வருடம் ஆனி மாதம் முப்பத்து இரண்டாம் (32)நாள் 2024 /07/16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தசமி திதியும் விசாக நட்சத்திரமும் கூடிய சுப நன்னாளில் காலை 5.45 மணிக்கு மஹா கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகும்.



அன்று அஷ்டாபிஷேகம் இடம் பெற்று மாலை ஐந்து முப்பது (5.30) மணிக்கு ஆச்சார்ய வர்ண கொடியேற்றத்துடன் (துவஜ அரோகணம்) தீர்த்தவாரி தேர்த் திருவிழா மங்கள சுபவேளையில் ஆரம்பமாக உள்ளது. இந்தியாவின் கேரள மாநிலமான சபரிமலையில் அமர்ந்து உலகம் முழுவதும் அருள் பாலிக்கும் தர்மசாஸ்தாவான ஸ்ரீ ஐயப்ப சுவாமிகள் அருளை வாரி வழங்கும் ஆலயமாக திகழும் இலங்கை திருநாட்டில் கொழும்பு 15 முகத்துவாரம் அளுத்மாவத்தை வீதியில் அருளாட்சி புரிந்து அருள் பலிக்கும் அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தின் வருடந்த 21வது தேர்த் திருவிழா முதல் நாளான 2024/07/16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5:45 மணிக்கு கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்று மாலை 06.00 மணிக்கு கணபதி விசேட அபிஷேகமும் 6:45 மணிக்கு ஐயப்ப சுவாமிக்கு அஷ்டாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மாலை ஐந்து முப்பது (5.30)மணிக்கு கொடியேற்றமும். மாலை 6:45 மணிக்கு படி பூஜையும் 7:45 மணிக்கு ஸ்ரீ பூதப்பலி பூஜையும் இரவு 8:45 மணிக்கு ஹரிவராசனமும் இரவு ஒன்பது 09:00 மணிக்கு நடைசாத்தலும் இரண்டாம் நாளான 2024/07/17ஆம் திகதி புதன்கிழமை காலை 5:45 மணிக்கு கணபதி ஹோமம், 6:45 மணிக்கு ஐயப்ப சுவாமி அஷ்டா அபிஷேகமும், 8 மணிக்கு ஸ்ரீ பூதபலி பூஜையும் 09.00 மணிக்கு கலச பூஜையும் 10:30 மணிக்கு மஞ்ச மாதா பூஜையும் மாலை 6:45 மணிக்கு படிபூஜையும் 7:45 மணிக்கு ஸ்ரீ பூதபலி பூஜையும் 8:45 மணிக்கு ஹரிவராசனமும் 9 மணிக்கு நடை சாத்துதலும் இடம்பெறும்.

மூன்றாம் நாளான 2024/07/18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை ஐந்து நாற்பத்தைந்து (05:45) மணிக்கு கணபதி ஹோமமும் 6:45 மணிக்கு அஷ்டாபிஷேகமும் 8:00 மணிக்கு ஸ்ரீ பூதபலி பூஜையும் 9 மணிக்கு கலச பூஜையும் 10:30 மணிக்கு நாகராஜா பூஜையும் மாலை 6:45 மணிக்கு படி பூஜையும் 07:45 மணிக்கு ஸ்ரீ பூதபலி பூஜையும் 8 :45 மணிக்கு ஹரிவராசனமும் 9:00 மணிக்கு நடை சாத்தலும் இடம்பெறும்.

நான்காம் நாளான 2024/07/19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 05:45 மணிக்கு கணபதி ஹோமம், 6:45 மணிக்கு அபிஷேகம், 08:00 மணிக்கு ஸ்ரீ பூதபலி பூஜை 9.30 மணிக்கு கருப்புசாமி கருத்த சாமி பூஜையும் 10.30 மணிக்கு கலச பூஜையும் மாலை 6:45 மணிக்கும் படி பூஜையும் 7:45 மணிக்கு ஸ்ரீ பூதபலி பூஜையும் 08:45 மணிக்கு ஹரிவராசனமும் 9:00 மணிக்கு நடைசாத்தலும் இடம்பெறும்.

ஐந்தாம் நாளான 2024/07/20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 5.45 மணிக்கு கணபதி ஹோமமும் 6:45 மணிக்கு அஷ்டாபிஷேகமும் 08:00 மணிக்கு ஸ்ரீ பூதப்பலி பூஜையும் 10:30 மணிக்கு கலப அபிஷேகமும் மாலை 6:45 மணிக்கு படி பூஜையும் 07:30 மணிக்கு ஸ்ரீ பூதபலி பூஜையும் 7:45 மணிக்கு பள்ளி வேட்டையும் 8:45 மணிக்கு ஹரிவராசனமும் 9:00 மணிக்கு நடை சாத்தலும் இறுதி நாளான 2024/07/21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5:45 மணிக்கு கணபதி ஹோமம், அஷ்டாபிஷேகம், திருப்பள்ளி எழுச்சி (ஆராட்டு) என ஆனந்த ஐயப்ப சுவாமிக்கு விசேட அலங்கார பூஜைகள் நடைபெறும்.

அன்று காலை 09:00 மணிக்கு ஆனந்த ஐயப்பன் தேர் ஏறி பவனி வந்து கொழும்பு வாழ் மக்களுக்கு தேர்த்தரிசனத்தை வாரி வழங்க உள்ளார். இதனைத் தொடர்ந்து பகல் 02:00 மணிக்கு கொடி இறக்கமும் கலசபிஷேகமும் உச்ச பூஜைகளோடு தீர்த்த வாரி தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

இத்தீர்த்தவாரி திருவிழாவில் அனைத்து ஐயப்ப பக்த உள்ளங்களையும் மற்றும் பக்த அடியார்களையும் தவறாது கலந்துகொண்டு ஆனந்த ஐயப்பனின் அளவில்லா அருளை பெற்றுக் கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபை பணிவுடன் கேட்டுக்கொண்டுள்ளது.

அறநெறி ஆசிரியர் மதன்




## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**20156) பூஜைஅறை அமைக்கும் போது முக்கியமாக நாம் மனதில் கவனத்தில் கொள்ள வேண்டிய 5 விஷயங்கள்..**

1 பூஜை அறை நம்முடைய மனதிற்குப் பிடித்தவாறு அமைய வேண்டும் .

2 தெய்வ அனுகூலம் நிறைந்திருக்க வேண்டும் .

3 நினைத்த காரியங்கள் கைகூட வேண்டும்.

4 எதிர்மறை சக்திகள் மறைந்து நேர்மறை சக்திகள் வீட்டில் நிலவ வேண்டும்.

5 நல்ல நிகழ்வுகள் அதாவது சுப நிகழ்ச்சிகள் எப்போதும் வீட்டில் நடைபெறவேண்டும். எனும் தெளிவான எண்ணத்துடன் பூஜை அறை அமைத்தல் என்பது மிகவும் சிறப்பு.

**20157) பூஜை அறை அமைக்கும் திசை எது?**

கிழக்கு முகம் மங்கலம். மங்கலமாய் காட்சி தரும் சூரிய யோகம் தரும் அருமையான திசை. பூஜை அறை ஈசானிய மூலை (வட கிழக்கு) கிழக்கு நோக்கி இருக்க வேண்டும்

ஈசனின் அருள் பாவிக்கும் இடம். குபேரன் செல்வங்களை அள்ளி வழங்கும் இடம். பெருமாள் மகாலட்சுமியோடு வாசம் செய்ய கூடிய இடம். மொத்தத்தில் தெய்வங்கள் அனைத்தும் தமக்குப் பிடித்தமான நிலையான ஒரு இடம் தேடி அமர்கின்றன.. என்றால் அதுவே ஈசானிய மூலை அதாவது வடகிழக்கு.

**20158) பஞ்சபட்சி சாஸ்திரம் என்றால் என்ன?**

ஐந்து பறவைகளின் குண நலன்களை மனிதனோடு ஒப்பிட்டு வெற்றி, தோல்விக்கான காலத்தை கணிக்கும் முறை ஆகும்.

**20159) பஞ்ச பட்சிகள் எவை?**

வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்.

**20160) அர்த்தசாஸ்திரம் யாரால் எழுதப்பட்டது?**

சாணக்கியரால் (கௌதில்யர்) ஆல் எழுதப் பட்ட நூல்.

**20161) அர்த்தசாஸ்திரம் எதற்காக எழுதப்பட்டது?**

பெரும்பாலும் பிராமணியத்தை நிலை நிறுத்த எழுதப்பட்ட நூல்.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 94



துன்பம் வந்தும் துவண்டு விடக்கூடாது. துன்பத்தை வெல்லும் வழியை யோசிக்காமல், துவண்டு போய் தம் திறமைகளை வீணாக்கக் கூடாது. எதிர்கொள்ள வேண்டிய கடமைகளை ஆற்றாமல், என்ன செய்வது', 'எங்க போவது 'எப்படி தப்பிப்பது' என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தால் நமக்கு வந்த சிறு துன்பம் கூட நூறு மடங்கு வளர்ந்து விடும்.

வாழ்க்கையில் வரும் இன்பதுன்பங்களை நடுநிலை உணர்வுடனும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். இன்ப துன்பங்களை நம் வாழ்க்கைப் பாதையில் கடந்து செல்லும் பாதசாரிகளைப் போல் பாவிக்க வேண்டும். அவைகள் எவ்விதத்திலும் நமக்கு சம்பந்தமில்லாதவை என்று உணர வேண்டும்.

அமைதியான மனமும். பேதலிக்காத அறிவும் மனிதனின் இரு பெரும் சக்திகளாகும். இவை இரண்டின் உதவியைக் கொண்டு பெரும் இக்கட்டான சூழ்நிலையைக் கூட நாம் எதிர்கொள்ள முடியும். துன்பங்கள் வரலாம், போகலாம். சூழ்நிலைகள் மாறலாம். வாழ்க்கையை சுகமானதாக ஆக்கவும். திருப்திகரமாக அமைப்பதற்கும் மனிதன் எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் ஆற்றலை வீணடிக்கக் கூடாது.

பரந்து விரிந்து கிடக்கும் ஆசைகளில். நல்லெண்ணங்கள் மட்டுமே விருப்பம் என்கிற வரையறைக்குள் வருகின்றன. நல்லெண்ணங்களால் உருவாகும் நல்ல விருப்பங்கள் அபரிதமான சக்தி உடையவையாகும். நற்காரியம் செய்ய விரும்பும் அல்லது மேன்மையான லட்சியத்தை அடைய விரும்பும் ஒருவன், தனக்கெதிராக லட்சக்கணக்கான விரோதிகள் வந்தாலும், பலவித அசௌகர்யங்கள் உண்டானாலும், தான் கொண்ட குறிக்கோளில் வெற்றி அடைந்தே தீருவான்.

நல்ல எண்ணம் கொண்டவன். தான் கொண்ட குறிக்கோள் வெற்றியடைய வேண்டும் என்ற முயற்சியில் இடைவிடாது. தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பான். தன் குறிக்கோளும், முயற்சியும் ஒன்று சேரும் போது அவனிடம் ஓர் ஆன்மீக ஊற்று உருவாகி, அதன் மூலம் தன் லட்சியத்தில் வெற்றி பெறுவதற்கான முயற்சியில் ஒவ்வொரு நொடியும் முன்னேறிக் கொண்டே இருப்பான்.

நல்ல விருப்பங்களை கொண்ட மனிதனிடம் நம்பிக்கை. உற்சாகம், துணிவு, செயலாற்றும் தன்மை ஆகியவைகளுக்கு குறைவிருக்காது. வெற்றி பெறுவதற்கான குணங்கள் அவனிடம் நிறைந்திருக்கும். தோல்வி என்பதே அவனை நெருங்காது. தீய எண்ணம் கொண்டவனின் விருப்பம், நஞ்சு போல் நம் சக்தியினை அழித்து விடும்.

# ஈழத்தில் சிவ வழிபாட்டின் மகிமை

(கடந்த வாரத் தொடர்)

சிவபெருமான் என்பவர் புனிதமான லிங்க அமைப்பில் இருக்கும் போது அவரின் உடல் ஆனது மிகவும் வெப்பத்துடன் காணப்படும். எனவே அவரைக் குளிர்ச்சிபடுத்தும் வகையில் அவருக்கு தேன், பால், பஞ்சாமிர்தம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்வார்கள்.

சிவபெருமானுக்காக இலங்கையில் கட்டப்பட்ட கோயில்கள் தான் இந்த பஞ்ச ஈஸ்வரங்கள் ஆகும். இவை ஈழத்தின் பெரும்பான்மையான கரையோர பிரதேசங்களினை அண்டிய பகுதிகளிலே ஈழத்தின் ஒவ்வொரு திசையிலும் அமைந்திருக்கின்றன. இக் கரையோர பிரதேசங்களை போர்த்துக்கீசர் கைபற்றி இலங்கையைத் தம்முடைய காலனித்துவ நாடாக மாற்றிய காலப்பகுதியில் இவ்வீஸ்வரங்களை இவர்கள் அழித்து சேதம் விளைவித்தனர்.

அடுத்ததாக நாம் ஈழத்தில் காணப்படுகின்ற சிவ பெருமானின் பஞ்ச ஈஸ்வரங்களாக வடக்கில் நகுலேஸ்வரம் , வடமேற்கே திருக்கேதீஸ்வரம், கிழக்கில் திருகோணேஸ்வரம், மேற்கில் முன்னேஸ்வரம், தெற்கில் தொண்டீஸ்வரம் என்பனவாகும்.

நகுலேஸ்வரம் இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கீரிமலையில் அமைந்துள்ள சிவன் கோயிலாகும். இது மூர்த்தி, தலம் , தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்காக அமையப்பெற்றதாக இந்த சிவாலயம் அமைந்துள்ள்து. இதன் காரணத்தினால் தான் உலக பிரசித்தி பெற்ற ஆயிரத்தெட்டு சிவத்தலங்களில்இதுவும் ஒன்றாகும்.

இந்த நகுலேஸ்வரம் கோயிலின் கோபுரம் ஈழத்தில் 35 வருட காலமாக நடைபெற்ற போரின் போது இவ்வாலயத்தின் கோபுரம் சேதமடைந்துள்ளது. இந்த ஆலயமானது திராவிடக் கட்டிடக் கலையின் மூலம் வடிவமைக்கப்பட்டது இது கி.மு 6 ம் நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்டதாக கூறப்படுகின்றது.

இது காலத்தால் முந்திய வழிபாட்டு தலங்களில் ஒன்றாக இது விளக்குகிறது. நகுல முனிவர், இராமன', சோழ வேந்தன், ஆதி சோழ மன்னன் முசுகுந்தன் போன்றோரால் தொழப்பெற்ற தீர்த்த தலம் இதுவாகும் .

இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் நகுலேச்சரப் பெருமான் என்றும் அம்பாள் நகுலாம்பிகை என்றும் அழைக்கப்படுகின்றனர். மூர்த்தி , தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற இத்தலத்தின் தல விருட்சமாக கல்லால மரமும் மற்றும் தீர்த்தமாக கீரிமலையும் விளங்குகின்றது.

முன்னொரு காலத்தில் ஈழத்தில் வடகரை முழுவதும் மலைத்தொடராக இருந்து, பின் கடலரிப்பினால் அழிந்து போக எஞ்சியுள்ள அடிவாரமே இப்போதுள்ள கீரிமலை என்பது ஆய்வாளர்களின் கருத்து ஆகும்.



முன்னொரு காலத்தில் மேரு மலையில் ஒரு பக்கத்தில் தவம் செய்து கொண்டிருந்த சுதாமா என்னும் பெயருடைய முனிவரால் தனது தவத்திற்கு இடையூறு செய்தமைக்காகச் சாபமிடப்பட்ட யமத்கினி என்ற வேடன் கீரி முகம் வாய்க்கப் பெற்றான். அவ் வேடன் இங்கு நீராடி சாப விமோசனத்தைப் பெற்றான்.கீரிமுகம் நீங்கியதால் அவ்வேடன் நகுல முனிவர் எனப்பட்டார். இதனையடுத்து இப்பிரதேசம் கீரிமலை என்றும் நகுலகிரி என்றும் பெயர் பெற்றதாக கூறப்படுகிறது. நகுலம் என்பது கீரி என பொருள்படும். இதுவே கீரிமலை தீர்த்தமானது. இதில் நீராடுபவர்களுக்கு அவர்களின் பாவங்களும் நோய்கள் போன்றவை நீங்கும்.

அடுத்ததாக திருக்கேதீஸ்வரம் இலங்கையின் வட மேற்கு கடற்கரை பகுதியிலுள்ள ஒரு சிவன் கோயிலாகும். இது மன்னார் மாவட்டத்திலுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரமான மாந்தோட்டத்தில் அமைந்துள்ளது. நாயன்மார்களினால் தேவாரப் பாடல் பெற்ற இரண்டு இலங்கைத் தலங்களில் இதுவும் ஒன்றாகும். திருஞானசம்பந்தர் மற்றும் சுந்தரமூர்த்தி நாயனார் பதிகம் பாடியுள்ளார்.

இத்தலத்திலுள்ள பாலாவி தீர்த்தத்தில் நீராடி இறுதி கடன் புரிவோருக்கு புண்ணியம் கிட்டும் எனவும் இத்தீர்த்தத்தில் நீராடுவோர்க்கு பிரம்மகத்தி போன்ற பாவங்கள் தீருமென்பதும் ஐதீகம் ஆகும்.

ஈழ நாட்டு பழங்குடியினர்களான நாகர்களது முக்கிய வழிபாட்டுத் தலமாதலால் இத்திருத்தலத்திற்கு நாகநாதர் எனவும் பெயர் வழங்கப்பட்டுள்ளது. சோழ , பாண்டிய மன்னர்கள் பல திருப்பணிகளையும் பெருமை மிக்க திருத்தலம் இதுவாகும்.

மன்னார் நகரமும் திருக்கேதீஸ்வரம் கோயிலும் சூழ்ந்த இத்திருவிடத்தில் உலக புகழ் பெற்ற பல்துறை தொழில் வல்லுனர்கள் வாழ்ந்த நகரமாகவும் சிற்பம் கலை நுணுக்கம் நிறைந்த ஆற்றல் மிக்க கலைஞர்களை கொண்டு திகழ்ந்த அழகு நகரமாகவும் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த திருக்கேதீஸ்வர திருத்தலம் ஆனது சோழ மன்னர்களால் பல பெயர்களால் அழைக்கப்பட்டது. அத்தோடு வடமேற்கு கடற்கரையை இத் திருத்தலம் காவல் காத்ததாக கூறப்படுகிறது.



எழுத்தாக்கம்:– லி.சிவகஜன்

## கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் தேவஸ்தானத்தின் ஆனி உத்தர வருஷாபிஷேக திருவிழா



கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் தேவஸ்தானத்தின் ஆனி உத்தர வருஷாபிஷேக திருவிழாவில் சோமஸ்கந்த சுவாமிகள் அலங்காரத் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி கொடுப்பதை படங்களில் காணலாம். *(படங்கள்: வடகொழும்பு தினகரன் நிருபர்)*

## 1,16,000 மாணவருக்கு...

பரிசில் திட்டத்திற்காக ரூ.824 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தரம் ஒன்று முதல் 11 வரையான 100,000 மாணவர்களுக்கு மாதாந்தம் ரூ.3,000 வீதம் 12 மாதங்களுக்கு புலமைப் பரிசில் வழங்க விருப்பதோடு இதற்காக ரூ.3,600 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரிவென மற்றும் பிக்கு கல்வி நிறுவனங்களில் சாதாரண தரம் கற்கும் மாணவருக்கான புலமைப் பரிசில் திட்டத்திற்காக ரூ.288 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதுடன். க.பொ.த உயர்தரம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பிரிவில் கற்கும் பிக்கு மாணவருக்கான புலமைப்பரிசில் திட்டத்திற்காக ரூ.720 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. தொலைத் தொடர்பு பரிவர்த்தனை ஆணைக்குழுவும் ஜனாதிபதி நிதியமும் இணைந்து இந்த புலமைப் பரிசில்களை வழங்குகின்றன. இதன்படி தற்போது செயற்படுத்தப்படும் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக இந்தத் திட்டத்தில் ரூ.5,000 மில்லியனுக்கும் அதிகமான தொகை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. அதன்படி, தற்பொழுது க.பொ.த உயர்தர மாணவர் மற்றும் தரம் ஒன்று முதல் 11 வரையான மாணவருக்காக இரண்டு புலமைப்பரிசில் திட்டங்கள் செயற்படுத்தப் படுகின்றன.

இவற்றின் கீழ், கொழும்பு மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 242 , தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 4,866,

கம்பஹா மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 240

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 6,234

களுத்துறை மாவட்டத்தின் 3 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 180

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 4,390

யாழ்ப்பாண மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 300

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 3,544

மன்னார் மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 120

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 1,030

வவுனியா மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 120

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 1,298

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 120

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 1,028

கிளிநொச்சி மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 120

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 956

குருணாகல் மாவட்டத்தின் 6 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 364

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 8,392

புத்தளம் மாவட்டத்தின் 2 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 120

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 4,046

மட்டக்களப்பு மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 300

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 3,436

அம்பாறை மாவட்டத்தின் 7 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 420

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 4,340

திருகோணமலை மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 300

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 2,972

பதுளை மாவட்டத்தின் 6 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 360

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 5,410

மொனராகலை மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 240

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 2,994

இரத்தினபுரி மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 240

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 5,642

கேகாலை மாவட்டத்தின் 3 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 180

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 4524

கண்டி மாவட்டத்தின் 6 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 360

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 6,472

மாத்தளை மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 240

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 2,894

நுவரெலியா மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 300

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 4,940

காலி மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 240

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 4,410

மாத்தறை மாவட்டத்தின் 4 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 240

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 3,644

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் 3 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 180

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 3,330

அனுராதபுரம் மாவட்டத்தின் 5 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 300

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 5,360

பொலன்னறுவை மாவட்டத்தின் 3 கல்வி வலயங்களில்,

க.பொ.த. உயர்தர மாணவர்கள் 177

தரம் 1 முதல் 11 வரையான மாணவர்கள் 2,456 ஆகியோருக்கு இந்தத் திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளன. தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை மட்டத்தில் புலமைப் பரிசில்களை வழங்க ஜனாதிபதி நிதியம் ஏற்பாடு செய்துள்ளது. ஒவ்வொரு பாடசாலையின் மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கப் படுகிறது. புலமைப் பரிசில் குறித்த விபரங்களை வலயக் கல்வி அலுவலகங்களில் பெற முடியும். எனவே இதுவரை புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்காத பாடசாலைகள் இருக்குமானால் விரைவாக விண்ணப்பிக்குமாறு ஜனாதிபதி நிதியம் கோரியுள்ளது. அதன்படி தற்போது நடைமுறையில் உள்ள மேற்படி இரண்டு புலமைப்பரிசில் திட்டங்களுக்கு மேலதிகமாக பிரிவென மற்றும் பிக்கு கல்வி நிலையங்களின் மாணவர்களுக்கு 5,000 புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் நாட்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

## சஜித்தின் தடை...

மீட்டெடுத்துள்ளதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி, ஊழல்களுக்கு எதிராக போராட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிக்கும் நிலையில் அந்தக் கட்சியுடன் இணைந்து ஊழலுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க தாம் தயார் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். எனினும், அதற்காக ஒரு நிபந்தனை உள்ளது என குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, சஜித் பிரேமதாச பாடசாலைகளுக்கு வழங்கும் பஸ்களை கொள்வனவு செய்வதற்கு பணம் வழங்கியது யார் என்பதை அவர் வெளிப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வேலைத் திட்டம் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் நடத்தப்பட்டு வரும் 'இணைந்து வெற்றி பெறுவோம்' என்ற மக்கள் பேரணி கூட்டத்தொடரின் இரண்டாவது கூட்டம் கண்டியில் நேற்று நடைபெற்றதுடன் அங்கு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டி பொது வர்த்தக சந்தை தொகுதிக்கு முன்பாக நேற்று நடைபெற்ற இந்த மக்கள் பேரணிக் கூட்டம் பொது ஜன பெரமுன கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அலுத்கமகேவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க;

லேவ்கே ரத்வத்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினராவார். லொஹானுக்கு அந்த பாக்கியம் கிடைக்கவில்லை. எனினும் இன்று நானும் லொஹானும் ஒரே மேடையில் அமர்ந்துள்ளோம். நாட்டை பாதுகாக்கும் பலம் எம்மிடம் உள்ளது. தாய் நாட்டை அன்பு செய்வதால் எமது கட்சியையும் நாம் நேசிக்கின்றோம்.

அன்று சிறு வயதில் அனுர பண்டாரநாயக்கவுடன் விளையாடச் செல்லும்போது பண்டாரநாயக்க எம்முடன் பேசுவார். அவ்வாறுதான் நாம் வளர்ந்தோம்.

நாடு நெருக்கடிக்குள் வீழ்ந்த சந்தர்ப்பத்தில் நாம் என்ன செய்வது? மலையக தமிழ் மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கிய பேச்சுவார்த்தையில் 1963 ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மற்றும் டட்லி சேனநாயக்க ஆகியோருடன் இந்தியாவுக்கு சென்று அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டோம். அவர்கள் அங்கு நாட்டைப் பற்றி சிந்தித்து தீர்மானம் எடுத்தனர்.

1971 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்தன எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்தபோது அன்றைய கிளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு தமது ஒத்துழைப்பை வழங்குவதாக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவிடம் உறுதியளித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி எமக்கு அவ்வாறு தான் பயிற்சி வழங்கியுள்ளது.

நம் நாட்டைப் பற்றி சிந்தித்து செயற்படுவதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை எடுப்போம். அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அழைப்பு விடுத்தால் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு ஜே. ஆர். எமக்கு கூறியுள்ளார். அதிகாரத்தை வழங்கும் போது அதனை பெற்றுக் கொள்ளாவிட்டால் அவர் ஐக்கிய தேசியக் கட்சியாளர் அல்ல.

முதலில் நாம் நாட்டைப் பாதுகாக்க வேண்டும். நான் இந்த நாட்டை மிக நெருக்கடியான காலத்தில் பொறுப்பேற்றேன். ஜே. ஆர் மற்றும் ரணசிங்க பிரமதாச ஆகியோருடன் செயற்பட்டதால் நான் அந்த நம்பிக்கையுடன் நாட்டைப் பொறுப்பேற்றேன். பொதுஜன பெரமுன எனக்கு ஒத்துழைப்பு வழங்கியது.

என்னிடம் எவ்வாறான சிறந்த கருத்துக்கள் இருந்தாலும் என்னால் தனியாக செயற்பட முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு பல தடவைகள் ஆலோசனை வழங்கினேன்.

பொது ஜன பெரமுனவில் பெரும்பாலானோர் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினர். அதன் பின்னர் அந்தக் கட்சி உடைந்து ஒரு தரப்பினர் சென்று விட்டனர். அரசருடன் பெரும்பாலானோர் இருந்தனர். அவரது சகாவுடன் சிறு அளவிலானோர் சென்று விட்டனர் இப்போது அரசரை கெட்டவர் என்றும் சகாவை நல்லவர் என்றும் கூறுகின்றனர். அது எவ்வாறு நடக்கும்?

ராஜபக்சக்களை பாதுகாக்க வேண்டிய அவசியம் எனக்கு கிடையாது. நான் இந்த நாட்டில் ரணசிங்க பிரேமதாசவை மட்டுமே பாதுகாத்துள்ளேன். நம்பிக்கையில்லா பிரேரணையின் போது முன்னணியில் இருந்தது நான் தான். நான் வேறு எவரையும் பாதுகாக்கவில்லை.

எமது தாய் நாட்டை பாதுகாப்பதற்கு ஒன்றிணையுங்கள் என்றே நான் ஐக்கிய தேசியக் கட்சியில் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். நான் தற்போது நாட்டை மீட்டெடுத்துள்ளேன்.

தற்போது ஊழல்களை ஒழிக்க வேண்டுமாம் நான் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஊழலுக்கு எதிராக போராடத் தயாராகவுள்ளேன். ஆனால் ஒரு நிபந்தனை. சஜித் பிரேமதாச பாடசாலைகளுக்கு பஸ்களை கொள்வனவு செய்ய பணம் கொடுத்தது யார் என்பதை அவர் வெளிப்படுத்த வேண்டும்.

நாம் ஒன்றிணைத்து இந்த பயணத்தை முன்னெடுப்போம். இதனைக் கைவிட முடியாது நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை வீழ்ச்சியடைய இடமளிக்காமல் பாதுகாத்து முன்னோக்கி கொண்டு செல்வோம்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் போன்றே மக்கள் விடுதலை முன்னணிக்கும் இந்த பயணத்தில் இணையுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## டொனால்ட் ட்ரம்ப் மீது...

துப்பாக்கிக் குண்டு பாய்ந்து சென்றது. அவர் உடனடியாகவே தலையில் அமர்ந்து கொண்டதால் அடுத்தடுத்த குண்டுகளிலிருந்து தப்பிக் கொண்டார்.

அவரது வலது காதில் இருந்து இரத்தம் வடிந்தோடியது. வலது கன்னத்தில் இரத்தம் படிந்திருந்தது.

துப்பாக்கிச் சூட்டையடுத்து டொனால்ட் டிரம்ப் மேடையில் இருந்து உடனடியாக அவரது பாதுகாவலர்களால் வெளியேற்றப் பட்டார். அங்கிருந்து உடனடியாக அவருக்காகக் காத்திருந்த வாகனத்திற்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டார். காரில் ஏற்றப் பட்டபோது அவர் தனது கைமுஷ்டியை வெளியே உயர்த்திக் காட்டினார்.

ட்ரம்பின் இந்த பொதுக்கூட்டத்தின் போது பலமுறை துப்பாக்கிச் சத்தம் கேட்டுள்ளது. இச்சம்பவத்தில் கூட்டத்தில் நின்றிருந்த ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்துள்ளனர்.

ட்ரம்ப் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற பின்னர் சிறிது நேரத்தில் வீடு திரும்பினார். அவர் நலமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ட்ரம்ப் மீதான...

தெரிவித்துள்ளார். தனது எக்ஸ் பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தற்போது நலமாக இருப்பது மகிழ்ச்சியளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## முச்சக்கர வண்டிகளின்...

ரூபா கட்டணத்தை பத்து ரூபாவில் குறைத்து 90 ரூபாவாக அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி சங்கம் நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது அந்த சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் மேல் மாகாணத்தில் முச்சக்கர வண்டியில் பயணிப்போருக்கு முதல் கிலோ மீற்றருக்கான கட்டணம் 100 ரூபாவாகவும் இரண்டாவது கிலோ மீற்றக்கு 90 ரூபா என்றும் அளவிடப்படும். இரவு 10 மணி முதல் காலை 05 மணி வரை இந்தத் தொகையுடன் 15% சேர்க்கப்படும். அந்த கட்டணத்தை மீற்றரில் கணக்கிடுவதில் அசௌகரிங்கள் இருப்பினும், ஏதேனும் அநீதி இடம் பெறுமானால் சரியான தகவல்களுடன் பொலிசாருக்கும் பயணிகள் போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கும் பயணிகள் அது தொடர்பான தமது முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும்.

## வரலாற்று முக்கிய தீகவாபி...

விக்ரமசிங்கவினால் தீகவாபி தூபியில் புனித தாது வைக்கப்பட்டதோடு அந்த சமயத்தில் விமானப் படையினர் மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தினர்.

புனித தாது மற்றும் ஏனைய தாதுக்கள் வைக்கப்பட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தாது மண்டபம் மற்றும் அன்னதான மண்டபம் என்பவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திறந்து வைத்தார். இதன்போது கருத்து தெரிவித்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, கிழக்கு மாகாணத்தின் பௌத்த பாரம்பரியத்தை பாதுகாப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் கீழ் தீகவாபி தாது கோபுரம் மற்றும் முகுது மகா விகாரையை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

'தீகவாபி அருண நிதியம்' என்ற பெயரில் ஒரு நிதியத்தை நிறுவி நிதி சேகரிக்கப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர், தாது கோபுரம் 62.3 அடி உயரத்துக்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு இராணுவம் ஒத்துழைப்பு வழங்கியதோடு பக்தர்கள் வழங்கிய தாராளமான ஆதரவும் பாராட்டுக்குரியது என்று குறிப்பிட்டார்.

## அரிசி இறக்குமதிக்கு...

முட்டைகளை மக்கள் தற்போது உட்கொள்வதாகவும் அமைச்சர் கூறினார். நமக்குத் தேவையான அரிசிக்கான நெல்லை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான தடையில்லாத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், 2022 ஆம் ஆண்டில் நாட்டு மக்களின் உணவுக்குத் தேவைக்காக 8 இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. அதற்காக அரசாங்கம் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிட வேண்டி ஏற்பட்டது. ஆனால் 2023 ஆம் ஆண்டில் 2.5 மில்லியன் மெட்ரிக் தொன் நெல்லை உற்பத்தி செய்தோம், இது நாட்டுக்குத் தேவையான மொத்த அரிசிக்கான நெல் உற்பத்தியாகும்.

## நேபாளத்தில் புதிய அரசு...

நேபாளத்தில் புஷ்பகமல் தாஹல் (PM Pushpa Kamal Dahal) என்ற பிரசந்தா தலைமையிலான கூட்டணி ஆட்சி இடம்பெற்று வந்தது.

இந்நிலையில், வரவுசெலவுத் திட்டம் தொடர்பான கருத்து வேறுபாடு காரணமாக ஆட்சியில் அங்கம் வகித்து வந்த முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலி தலைமையிலான நேபாள கம்யூனிஸ்டு கட்சி ஆதரவை திரும்பப் பெற்றது.

## தாய்லாந்து நாட்டுக்கு...

வழங்கப்பட்டுள்ளது. இலங்கையர்கள் விசா பெறாமல் தாய்லாந்துக்கு செல்வது இதுவே முதல் முறை. தாய்லாந்து குடிமக்கள் விசா இல்லாமல் இலங்கைக்கு வருவதற்கு ஏற்கனவே இலங்கை அனுமதி வழங்கியுள்ளது.

தாய்லாந்தின் உள்துறை அமைச்சகத்தின் கூற்றுப்படி, விசா அனுமதி பெற்ற நாடுகளிலிருந்து வரும் பயணிகள் 30 முதல் 60 நாட்கள் வரை நாட்டில் தங்கலாம். எவ்வாறாயினும், அனைத்து பயணிகளிடமும் பணம், தங்குமிடம் மற்றும் திரும்புவதற்கு டிக்கெட்டுகளுக்கான சான்றுகள் இருக்க வேண்டும்.

## நாட்டின் வாகன விபத்தினால்...

பொலிஸ் பிரிவுகளிலேயே இந்த வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்தனர். கிரிவுல்ல ஹமன்கல்ல வீதியின் கொஹிலாவல பிரதேசத்தில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதிக் கொண்டுள்ள விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

குளியாபிட்டிய மற்றும் கிரிவுல்ல பிரதேசங்களைச் சேர்ந்த 19 மற்றும் 21 வயதுடைய இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, காலி கொழும்பு வீதியில் அம்பலாங்கொடை பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 20 வயதான இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். காலி யிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் அதனை செலுத்தியவரால் கட்டுப்படுத்த முடியாமல் வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## கொழும்பு கோட்டைப் பகுதியில்...

தெரிவித்துள்ளனர். கொழும்பு துறைமுக நகர நெடுஞ்சாலை வாயில் நிர்மான நடவடிக்கைகளுக்காக தனியார் நிறுவனமொன்று அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில் நேற்று முன் தினம் இந்த எலும்புக் கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த வேளையில் ஆறு அடி ஆழத்திலிருந்து இந்த மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மனித எலும்புக்கூட்டை கண்ட ஊழியர்கள் அது தொடர்பில் குறித்த வேலைத் திட்டத்தின் பரிசோதகருக்கு அறிவித்துள்ள நிலையில் அந்த அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு தகவல் பொலிசாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து அந்த பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் மாஜிஸ்திரேட் பரிசோதனையும் நடத்தப்பட வுள்ளது. கொழும்பு துறைமுக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வழிகாட்டலில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# இன்றைய பலன்கள்

(15.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
காரியங்களில் கவனமாக இருப்பது அவசியம். கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருந்து தடைகளை உடைத்து எறிந்து வெற்றி காண்பீர்கள்.



**ரிஷபம் :**
காரியங்களை திட்டமிட்டு உற்சாகத்தோடு செய்வீர்கள். வெற்றியைத் தேடும் நீங்கள் தடைகளை தகர்த்து எறிய தயங்க மாட்டீர்கள்.



**மிதுனம்:**
உழைப்பில் உற்சாகமாக பாடுபட்டு திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக செய்வீர்கள். இடை இடையே வரும் தாமதங்களை பொருட்படுத்தாமல் கடந்து செல்ல முற்படுவீர்கள்.



**கடகம்:**
வெற்றியும் மனதுக்கு சந்தோஷமும் உண்டாகும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு எதிர்பார்த்த சம்பள உயர்வும் இடமாற்றமும் ஏற்படும்.



**சிம்மம்:**
அவசரமாக செய்து முடிக்க வேண்டிய காரியங்களை திட்டமிடுவீர்கள். முக்கிய நண்பர்களின் துணை கொண்டு கடினமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.



**கன்னி:**
பணம் சம்பந்தமாக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். பண வரவுகள் இருந்தாலும் பற்றாக்குறையினால் சிறு பாதிப்பு ஏற்படலாம்.



**துலாம்:**
சிக்கலான செயல்களையும் சிந்தனையுடன் செயல்பட்டு சிறப்பாக முடிப்பீர்கள். வடக்கு திசையில் இருந்து வரும் தகவல் இனிமையானதாக இருக்கும்.



**விருச்சிகம்:**
நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் பல இருந்தாலும் சிறு சிறு தடைகள் ஏற்படும். பழைய நண்பர்கள் சரியான நேரத்திற்கு கை கொடுப்பார்கள்.



**தனுசு:**
சிறப்பான வாழ்க்கை அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் திட்டமிட்டு செயல்படுவீர்கள். நீண்ட நாள் நண்பர் ஒருவரை சந்திப்பதன் மூலம் மகிழ்ச்சி ஏற்படும்.



**மகரம்:**
நண்பர்களின் உதவியோடு பல காரியங்களை செய்து முடிப்பீர்கள். தொல்லைகளுக்கு அஞ்சாத தோல்விகளை கண்டு துவளாத நீங்கள் இடையூறுகளை புறந்தள்ளி வெற்றி பெறுவீர்கள்.



**கும்பம்:**
எதிலும் கவனம் தேவை. கடுமையான பணிகளையும் முயற்சியோடு செய்து முன்னேற்ற பாதையில் நடை போடுவீர்கள்.



**மீனம்:**
பண வரவுகள் தள்ளிப் போகலாம். முயற்சிகளில் சிறுசிறு தடங்கல்கள் இருந்தாலும் தீவிரமாக உழைப்பீர்கள்.

## சேருவில ரஜமஹா... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரத்தை உருவாக்கினார். அதன் பிறகு, முப்பது ஆண்டுகளாக, இந்தப் பாழடைந்த பகுதிகளை புனரமைப்பதில் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிட்டது

அதற்காக அமுல்படுத்தப்பட்ட வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் வேலைத்திட்டங்களுக்கு பாரியளவிலான கடன்களை எடுக்க வேண்டியிருந்தது. தற்போது நாடு செலுத்த முடியாத வெளிநாட்டுக் கடனில் எத்தனை சதவீதம் வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்காக செலவிடப்பட்டது என்பதை நிதியமைச்சு தனி நூலில் குறிப்பிட்டுள்ளது என்றார்.

## ஜனாதிபதி தேர்தல்... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பதால் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதனை அங்கீகரிக்க முன்பதாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதால் அதன் மூலம் அரசியலமைப்பு மீறப்படும் என நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் எனக் கோரி மேற்படி சட்டத்தரணி அந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம், சட்ட மா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பில் தொழிலதிபரான சி.டி. லெனாவா நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமைகள் மனுவை அண்மையில் உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் நிராகரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலில் ஏவு... (03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கிணங்க மேற்படி ஏவுகணையின் இரும்புத் துண்டொன்று அவரது தலையில் தாக்கியதில் குறித்த நபர் காயமடைந்துள்ளதாகவும் அவர் தற்போது வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் தேசிய கூட்டணியின்...

மாநாடு நடைபெறவுள்ளது.

இதன்போது, பிரதம அதிதியாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்துகொள்ளவுள்ளார்.

## சமுர்த்தி வங்கி ஊடாக...

மாதத்தில் ஆரம்பிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விவசாயம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக இந்த விசேட கடன் அறிமுகப்படுத்தப்படுகிறது என்றும் முறையான முறைமையொன்றின் கீழ் இந்த கடன்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 2023 முதல் 4 மாதத்தோடு...

821. 3 பில்லியன் என்றும் அதனோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதத்தில் அரசாங்கத்தின் வருமானம் 1218.1 பில்லியனாக அதிகரித்துள்ளதாகவும் நிதிமைச்சு தெரிவித்துள்ளது.

ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் வருமானம் 396.7 பில்லியன் ரூபாவாகும் என்றும் நிதிய மைச்சு தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான மத்திய கால அரச வருமான நிலைமை தொடர்பான அறிக்கையை வெளியிட்டு நிதியமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் 2024 ஆம் ஆண்டுக்காக எதிர்பார்க்கப்பட்டுள்ள அரசாங்க வருமானத்தில் நூற்றுக்கு 29.3 வீதத்தை தற்போது எட்ட முடிந்துள்ளதாகவும் நிதிய மைச்சு தெரிவித்துள்ளது.

## நாட்டின் கரையோரத்தை...

கள் என பலரும் உற்சாகப்படுத்தி வழியனுப்பி வைத்தனர் .

இவரது இச்சாதனைப் பயணம், பேருவளை பள்ளி வீதியில் ஆரம்பமாகி, காலி, மாத்தறை வழியாக மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார்,

புத்தளம்,நீர் கொழும்பு, கொழும்பு வழியாக பேருவளை வந்தடையும் திட்டத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



# புலம்பெயர்ந்த தொழிலாளர் சமூகத்தை வலுப்படுத்தி

## புலம்பெயர்ந்தோரை கௌரவப்படுத்தல்

## சுயதொழில் உதவி வழங்கும் நாடளாவிய ரீதியான வேலைத்திட்டம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் பணிபுரிந்துவிட்டு நாடு திரும்பிய தொழிலாளர்கள் மற்றும் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் பணிபுரிகின்ற தொழிலாளர்களின் கணவர் அல்லது மனைவி இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெறுகிறார்.

புதிய சுயதொழில் முயற்சியை ஆரம்பிக்க அல்லது தற்போதுள்ள சுயதொழிலை மேம்படுத்துவதற்காக பொருளுதவி வழங்கப்படும்.

2024 ஆம் ஆண்டு தொழில் முனைவோர் வருடமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், இவ்வேலைத்திட்டத்தை மேலும் விஸ்தரித்து பலருக்கு நன்மைகள் அளிக்கப்பட இருக்கிறது. அதற்கமைய முதலாம் கட்டத்தின் கீழ் குருநாகல், கேகாலை, புத்தளம், மாத்தளை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்து வெளிநாட்டில் பணியாற்றும் தொழிலாளரின் கணவர் அல்லது மனைவிக்கு கீழே காட்டியுள்ளவாறு விண்ணப்பம் சமர்ப்பிக்குமாறு பணியகம் கோருகிறது.

**விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் முறைகள்-**

1. பணியக இணையதளம் www.slbfe.lk
2. மேற்படி மாவட்டங்களின் பிரதேச செயலகங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) மூலம்.
3. பணியகத்தின் பின்வரும் மாவட்ட அலுவலகங்கள் மூலம்

**விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் முறைமை-**

1. மேலே குறிப்பிட்டுள்ள பிரதேச செயலகங்களில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் கையளிக்க முடியும்
2. பணியகத்தின் மாவட்ட அலுவலகத்தில் சமர்ப்பிக்க முடியும் அல்லது மின்னஞ்சல் செய்யலாம்.

**விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 17.07.2024**

| குருநாகல் | கண்டி | சிலாபம் | தம்புள்ளை | அனுராதபுரம் |
|---|---|---|---|---|
| இலக்கம் 22,<br>தெற்கு சுற்று வீதி, குருநாகல்<br>037-2223661<br>037-2225854<br>provi_kgala@slbfe.lk | இல. 18,<br>ஹீரஸ்ஸகல வீதி,<br>முல்கம்பல, கண்டி.<br>081-2227011<br>provi_kandy@slbfe.lk | மைக்குளம்,<br>கொழும்பு வீதி, சிலாபம்.<br>032-2221202 | இல. 03,<br>நிஷங்க மாவத்தை,<br>தம்புள்ளை<br>066-2284074<br>dct_damb@slbfe.lk | இல. 29, அபய இடம்,<br>3வது ஒழுங்கை, அனுராதபுரம்.<br>025-2223464<br>asst.mgr_apura2@slbfe.lk |

(விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த பிறகு, நீங்கள் வசிக்கும் மாவட்டம் space தேசிய அடையாள அட்டை இலக்கத்தை type செய்து 0701022280 எனும் இலக்கத்துக்கு SMS ஊடாக அனுப்பி வைக்கவும்)

ශ්‍රී ලංකා විදේශ සේවා නියුක්ති කාර්යාංශය
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
Sri Lanka Bureau of Foreign Employment

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 0112 365 673

இன்றேல் 1989 க்கு அழையுங்கள் www.slbfe.lk

234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை.
தொ.இல - 0112 880 500 / 0112 864 101 / 0112 864 103 - 5

# வடக்கின் உதயம்

## சிறுவர் நூலகம் திறந்து வைப்பு



**சாவகச்சேரி விசேட நிருபர்**

ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் முல்லைத்தீவு நிலையத்தால் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கல்மடு நகர் பகுதியில் சிறுவர் நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் சிறுவர் பிரிவு மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் முயற்சியால் மேற்படி செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பால் அலுமாரி மற்றும் புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# பிரதமர் தினேஸ் குணவர்தன கிளிநொச்சிக்கு விஜயம்






**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சிக்கு அண்மையில் விஜயம் செய்த பிரதமர் தினேஸ் குணவர்தன முகாமைத்துவ பயிற்சி அலகின் ஆண்கள் விடுதியினை திறந்து வைத்ததுடன் முகாமைத்துவ கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

கிளிநொச்சிக்கு கடந்த 12ஆம் திகதி விஜயம் செய்த பிரதமர் தினேஷ் குணவர்தன கிளிநொச்சியில் அமைந்துள்ள முகாமைத்துவ கல்வி அலகின் ஆண்கள் விடுதியினை திறந்து வைத்தார்.

முகாமை துவ கற்கைநெறியினை நிறைவு செய்த ஆறாவது அணியினருக்கான சான்றிதழ்களையும் அவர் வழங்கி வைத்தார். இந் நிகழ்வு கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெற்றுள்ளது. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுனர் பி.எஸ் எம் சாள்ஸ், வடக்கு மாகாண செயலாளர் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ் நகரில் இரு உணவகங்களுக்கு சீல்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாண நகர் பகுதியில் உள்ள இரண்டு உணவகங்களுக்கு நீதி மன்ற உத்தரவின் பேரில் சீல் வைக்கப்பட்டுள்ளது. பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை நகர் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த இரு உணவகங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர்.

நீதிமன்றில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்ட வேளை, உணவகத்தில் காணப்படும் சுகாதார குறைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகத்திற்கு சீல் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.


இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**திறைசேரி உண்டியல்கள் வழங்கல்**

**ரூ. 110,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள்**
**2024 ஜுலை 17ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124J180 | LKA18225A175 | LKA36425G184 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 30,000 | 50,000 | 110,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 ஜுலை 17
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஜுலை 19
வழங்கப்படும் திகதி : 2024 ஜுலை 19
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஜுலை 17 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



**சமூக நலன்புரி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு**
**சபரகமுவ மாகாணம்**

**அறிவித்தல்**

**சபரகமுவ மாகாண நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத தொகுதி 2 சேவை வகுதிக்கு (MN 1 - 2016) உரித்தான உதவி பெண் வார்டன் IIIஆம் வகுப்பு பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டி - 2024**

சபரகமுவ மாகாண நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தில் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத தொகுதி 2 சேவை வகுதிக்கு (MN 1 - 2016) உரித்தான உதவி வார்டன் IIIஆம் வகுப்பு பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. வெற்றிட எண்ணிக்கை - 01
02. விண்ணப்பப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள்: 2024-08-30
03. ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்:
   (அ) **கல்வித் தகைமைகள்:**
   மொழி மற்றும் கணிதம் உட்பட கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
   (ஆ) **தொழில்சார் தகைமைகள்:**
   அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றில் சிறுவர் அபிவிருத்தி / உளவியல் / ஆலோசனை போன்ற விடயங்கள் தொடர்பில் 06 மாதங்களுக்குக் குறையாத காலத்திற்கான கற்கை நெறியொன்றைக் கற்றிருத்தல்
   (இ) **அனுபவம்:**
   சபரகமுவ மாகாண நன்னடத்தை, சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனமொன்றில் விடுதி பொறுப்பாளர் / ஓவர்சியர் / ஆரம்ப தரத்தில் (தேர்ச்சியற்ற, அரைத் தேர்ச்சி மற்றும் தேர்ச்சிபெற்ற சேவை வகுதி) 05 வருடத்திற்குக் குறையாத செயல்நிலை மற்றும் திருப்திகரமான நிரந்தர சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.
04. **வயதெல்லை :** ஏற்புடையதல்ல
05. **பதவிக்குரித்தான சம்பள அளவு:**
   03/2016ஆம் இலக்க மற்றும் 2016-02-25ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் உதவி வார்டன் IIIஆம் தரத்திற்குரித்தான சம்பள வகுதி MN1-2016 ஆகும் என்பதுடன் இயைபுடைய மாதாந்த சம்பள அளவு ரூபா 27,140-10×300-11×350-10×495-10×660- ரூபா 45,540/- ஆகும்.
06. எழுத்துமூலப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்க்கப்படும். பரீட்சையில் சித்தியடையும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கிடையில் ஆட்சேர்ப்பதற்கு உத்தேசித்துள்ள எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு திறமை வரிசைக் கிரமத்தில் ஆட்சேர்க்கப்படுவர்.
07. இந்த ஆட்சேர்ப்பிற்கு இயைபான முழுமையான அறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவம் www.sg.gov.lk எனும் இணைதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**தினீஷா எஸ். ரத்நாயக்க,**
**செயலாளர்,**
**சமூக நலன்புரி நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு**
**கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு,**
**சபரகமுவ மாகாண சபை.**
**2024-07-12.**


# நடமாடும் சேவை



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் வெல்வோம் சிறீலங்கா நடமாடும் சேவை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. முதல் நாள் நடமாடும் சேவையினை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார ஆரம்பித்து வைத்தார். குறித்த நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர் ,கிளிநொச்சி மாவட்ட பதில் எஸ்முரளீதரன் மற்றும் வேலைநாட்டில் வேலைவாய்ப்பை பெறும் குடும்பத்தினர், அவர்களின் பிள்ளைகள் , பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# சாவகச்சேரியில் காரில் கொண்டு செல்லப்பட்ட 87 கிலோ கஞ்சா மீட்பு

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் வெள்ளிக்கிழமை 87கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது; வெள்ளிக்கிழமை அதிகாலை வேளை சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ32 வீதியில் இராணுவ புலனாய்வுப் பிரிவின் தகவலுக்கு அமைவாக வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் அரை கிலோ கஞ்சாவுடன் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த நபர் அரசாங்க உத்தியோகத்தர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் கைதான நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் கச்சாய் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் அதிகாலை வேளையில் 87கிலோ கஞ்சாவுடன் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை

**கோப்பாய் குறூப் நிருபர்**

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவ ஸ்ரீ பால. குணானந்த குருக்கள் நடத்தும் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசையும் சிறப்பு சொற்பொழிவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை(14) நடை பெற்றது. சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. சிறுப்பிட்டி மேற்கு நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மூத்த விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலந்து கொண்டார்.

"மாணிக்கவாசகர் சுவாமிகளின் வாக்கும் வாழ்வும்" என்னும் விடயப்பொருளில் இளம் சைவப்புலவர் க.கயிலைவாசன் சொற்பொழிவாற்றினார். இதேநேரத்தில் நவாலி தெற்கு நாகராஜா இராஜேஸ்வரி அம்பாள் ஆலய பிரதான மண்டபத்தில் சைவப்புலவர் செ. த.குமரன் "மாணிக்கவாசகர் சுவாமிகளின் அன்பு" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றினார்.

இரு நிகழ்வுகளிலும் மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசையும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

# யாழில். மூதாட்டி வழுக்கி விழுந்து உயிரிழப்பு

**யாழ்.விசேட நிருபர்**

மலசல கூடத்திற்கு சென்ற வேளை வழுக்கி விழுந்த மூதாட்டி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், வடமராட்சி, புலோலி தெற்கை சேர்ந்த இராசம்மா சின்னத்தம்பி (வயது 82) என்பவரே உயிரிழந்துள்ளார். கடந்த 07ஆம் திகதி தனது வீட்டில் உள்ள மலசல கூடத்திற்கு சென்றவேளை வழுக்கி விழுந்து மயக்கமடைந்துள்ளார். அதனை அடுத்து அவர் அங்கிருந்து மீட்கப்பட்டு, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளி 2024.07.12 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5532 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 39,058,864.00 — ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 3 6 5 8 5 0

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 107 — ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 5 8 5 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3774 — சீட்டிழுப்பு திகதி 2024.07.12 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.65,345,942.36 — ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 03 26 44 75 — விசேட எழுத்து D — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 11609

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1880 — 2024.07.12 — 41959 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 438,851,730.00 — ஆங்கில எழுத்து E — சுப்பர் இலக்கம் 08 — வெற்றி இலக்கங்கள் 23 49 56 70 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.12 — சீட்டிழுப்பு இலக்கம் 357 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 9 8 9 3 8 2 — L7 எழுத்து S — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,778,126.88

ராசி சுப பலன் — திகதி 2024.07.12 — சீட்டிழுப்பு இலக்கம் 841 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,706,895.60 — வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 20 29 30 51 — தனயோக இலக்கம் 45865 — நாளுக்கான விதி எண் 24

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1562 — 2024.07.12 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,857,145.92 — ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 07 22 56 68 — விசேட எழுத்து I — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 50148



ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனி 2024.07.13 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5533 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 39,637,024.00 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 1 4 3 5 7 6

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 108 — ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 3 5 7 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3775 — சீட்டிழுப்பு திகதி 2024.07.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.65,504,912.76 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 27 29 40 62 — விசேட எழுத்து L — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 31635

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1881 — 2024.07.13 — 89986 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 439,013,382.00 — ஆங்கில எழுத்து N — சுப்பர் இலக்கம் 20 — வெற்றி இலக்கங்கள் 33 37 64 73 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0359 — ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 5 6 4 1 2 8 — L7 எழுத்து H — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,819,404.88

ராசி சுப பலன் — திகதி 2024.07.13 — சீட்டிழுப்பு இலக்கம் 842 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,802,827.60 — வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 01 15 53 55 — தனயோக இலக்கம் 76079 — நாளுக்கான விதி எண் 24

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1563 — 2024.07.13 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,025,261.12 — ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 03 04 23 59 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 64639

# நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் அரசியலமைப்பு பேரவைக்கு கிடையாது

## ஜனாதிபதியின் நியமனங்களை அனுமதிப்பது அல்லது அனுமதிக்காமை மட்டுமே பேரவையின் பொறுப்பு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் அரசியலமைப்பு பேரவைக்கு கிடையாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன (12) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அந்த வகையில் ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும் நியமனங்களை அனுமதிப்பது அல்லது அனுமதிக்காமல் விடுவதே அரசியலமைப்பு பேரவையின் பொறுப்பு என தெரிவித்த சபாநாயகர், அது தொடர்பில் ஜனாதிபதியே நடவடிக்கை எடுப்பார் என்றும் தெரிவித்தார்.

குறித்த நியமனங்களை மேற்கொண்டு ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவைக்கு அனுப்பினால் அதனை அனுமதிப்பது அல்லது அனுமதிக்காமல் விடுவது என்ற பாகத்தையே அரசியலமைப்பு பேரவை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தயாசிறி ஜயசேகர எம் பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலாகவே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

உச்ச நீதிமன்றம் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு 7 நீதிபதிகளை நியமிக்க முடியும். தற்போது உச்ச நீதிமன்றத்தில் சுமார் 200 மனித உரிமை வழக்குகள் காணப்படுகின்றன.

அவற்றை விசாரணை செய்வது தொடர்பில் சபாநாயகர் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

மனித உரிமை வழக்குகள் மாத்திரம் 200க்கு மேல் காணப்படுகின்றன. அவற்றை இரண்டு மாதங்களுக்குள் விசாரணை செய்து முடிக்க வேண்டியுள்ளது. அதற்காக இரண்டு நீதிபதிகளை நியமிக்க வேண்டும்.

அங்குள்ள நீதிபதிகள் அந்த வேண்டுகோளை முன் வைத்துள்ளனர். அத்துடன் உச்ச நீதிமன்றத்திற்கு ஐந்து நீதிபதிகள் தேவைப்படுகின்றனர். அனைத்துமாக 7 பேர் நியமிக்கப்பட வேண்டும். இது தொடர்பில் உடனடியாக சபாநாயகர் தலையிட வேண்டும். அப்பாவி மக்களின் வேண்டுகோள் இதுவே.

உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது நிறுத்தப்படவில்லை என பிரதம நீதியரசர் தெரிவித்துள்ளார். எனினும் நீதிபதிகள் நியமிக்கப்படவுமில்லை.

பாராளுமன்ற சபாநாயகர் மற்றும் அரசியலமைப்பு பேரவையின் தலைவர் என்ற வகையில் நீங்கள் அவ்வாறு அந்த நியமனங்களை தடை செய்திருந்தால் எங்களுக்கு கூறுங்கள்.

உங்களுக்கு அதற்கான அதிகாரம் உள்ளது. அந்த அதிகாரத்தை நீங்கள் எதற்காகவும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்றும் தயாசிறி ஜயசேக்கர எம்பி தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த சபாநாயகர்;

நீதிபதிகளை நியமிப்பது அரசியலமைப்பு பேரவையின் பொறுப்பு கிடையாது. அதன் பொறுப்பு அவ்வாறான நியமனங்களை அனுமதிப்பது அல்லது அனுமதிக்காமை மட்டுமே. ஜனாதிபதியே அதனை நியமிக்க வேண்டும் அங்கும் அதற்கான தடையுத்தரவு காணப்படுகிறது.

அதனால் அவர் அது தொடர்பில் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரால் அந்த நியமனங்கள் வழங்கப்பட்டால் அரசியலமைப்பு பேரவை அதனை அனுமதிக்கும். என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
## அறிவித்தல்

குடியியல் நடபடிக்கோவையின் 554u பிரிவின் கீழான விண்ணப்பம்:

வழக்கு இல : தத்துவம்/47/2024

மரணமடைந்தவரான 127 Elders street south, Clayton South, Victoria, Australia ஐ சேர்ந்த திருமதி. சிவநேசமலர் நல்லைநாதன் என்பவரின் மரணசாதன தத்துவப்பத்திரத்தை மீள் இலச்சினை செய்வதற்கான விண்ணப்பம்.

சின்னத்தம்பி நல்லைநாதன்

127 elders street south, Clayton South, Victoria, Australia

மனுதாரர் தமது அற்றோணித் தத்துவக்காரரான "மதுரா" மூளாய் மேற்கு சுழிபுரம் எனும் முகவரியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தியாகலிங்கம் மூலம் தோற்றம்.

முறையாக நியமிக்கப்பட்ட நிறைவேற்றுனர்

No 167 Elders Street South, Clayton South, Victoria, Australia எனும் முகவரியில் வதியும் சின்னத்தம்பி நல்லைநாதன் ஆகிய மனுதாரர் தமது காலஞ்சென்ற மனைவியாகிய திருமதி சின்னத்தம்பி சிவநேசமலரினால் 2004.10.27ம் திகதி அவுஸ்திரேலியாவில் விக்ரோறியா மாகாணத்தில் சொலிசிற்றராகத் (Solicitor) தொழில் பார்க்கும் வினோதினி சச்சிதானத்தன் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்த மரணசாசனத்தில் (Last will and Testament) தம்மை நிறைவேற்றுனராக நியமித்திருந்துள்ளதன் பிரகாரம் அளிக்கப்பட்டிருந்த அதிகாரத்தின் படி அவரால் குறித்த மரணசாதனம் அவுஸ்திரேலியாவில் விக்ரோறியா மாகாணத்தின் மீயுயர் நீதிமன்றில் நிருபிக்கப்பட்டதனையடுத்து, குறித்த மீயுயர் நீதிமன்றின் மரணசாதனத் தத்துவப் பத்திரங்கள் தொடர்பான பதிவாளர் (Registrar of Probates) குறித்த மரணசாசனம் தொடர்பில் மரணசாசனத் தத்துவப் பத்திரத்தை (Probate) அவரது 2023.05.15ந் திகதிய கட்டளையின் மூலம் மனுதாரரான குறித்த சின்னத்தம்பி நல்லைநாதனுக்கு வழங்கியிருந்தார்.

குறித்த மரணசாதனத்தை இம்மன்றில் மீள் இலட்சினை செய்வதற்கு மனுதாரரான குறித்த சின்னத்தம்பி நல்லைநாதன் சிவில் நடபடிக் கோவையின் IIIVIII (b)ம் அத்தியாயத்தின் 554U பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பமொன்றைச் செய்துள்ளார்,

குறித்த அவரது விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை / ஆட்சேபனை / கள் எதுவும் இருப்பின் அதனை

அவற்றை 2024.08.01 திகதியன்று முற்பகல் 9.00 மணிக்கு இம்மன்றில் நேரடியாகவோ, தங்கள் சட்டத்தரணி மூலமாகவோ தோன்றித் தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறீர்கள்

**மன்றின் கட்டளைப்படி**
**2024ம் ஆண்டு ஆனி 24ம் திகதி**

**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம்,**
**மல்லாகம்**

---

### அநுராதபுரம் மாவட்டத்தில்

# தென்னை பயிர்ச்செய்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் 'வெள்ளை ஈ' தாக்கம்





**திறப்பனை தினகரன் நிருபர்**

தென்னை பயிர்ச்செய்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வெள்ளை 'ஈ' யின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக அவற்றை வேட்டையாடும் இனம் ஒன்று விடுவிக்கப்பட்டுள்ளது. சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்காமல் உயிரியல் ரீதியாக கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

அநுராதபுரம் மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளான சாலியபுர, மிகிந்தலை, ஹிதோகம, மக இலுப்பல்லம ஆகிய பிரிவுகளில் வெண்ணிற ஈயை வேட்டையாடுபவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது வெள்ளை ஈ பெருகுவதை அழிக்கிறது என்றும் வேட்டையாடுபவர்கள் சுமார் ஒரு மாத காலத்தில் பெருகும் தன்மையை கொண்டுள்ளனர் என்றும், இதன் காரணமாக, மிகக் குறுகிய காலத்தில் வெற்றிகரமான நிலையை எதிர்பார்க்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை ஈ பாதிப்பு காரணமாக மேற்படி மாவட்டத்தில் சுமார் 30% வரை விளைச்சல் குறைந்துள்ளதால் இதற்குரிய பரிகாரமாக வேட்டையாடும் " என்கார்சியா குவாடலூபே, கனோருவா பெலாட்டி " என்ற இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றி தோல்விக்கு ஏற்ப, மாவட்டம் முழுவதும் இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வேட்டையாடும் உயிரணுக்கள் மற்றும் வேட்டையாடும் செல்கள் விடுவிக்கப்பட்டு, வெள்ளை ஈ சேதம் குறித்தும் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டதோடு, இதில் 50க்கும் மேற்பட்ட தென்னந்தோப்பு உரிமையாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

---

### புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு

## பாதுகாப்புச் சேவை, துப்புரவேற்பாட்டுச் சேவை மற்றும் சுத்திகரிப்புச் சேவைகளுக்கு விலைமனுக்கோரலுக்கான அழைப்பு

1. கொழும்பு 07, ஸ்ரீமத் அனகாரிக்க தர்மபால மாவத்தை, 135 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சிற்கு பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் செயலாளரினால் தகுதிகளைப் பூர்த்திசெய்துள்ள தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
   - i. பாதுகாப்புச் சேவைகள் - 2024-09-01 நண்பகல் 12.00 மணி முதல் 2025-09-01 நண்பகல் 12.00 மணி வரைக்காகவும்
   - ii. துப்புரவேற்பாடு மற்றும் சுத்திகரிப்புச் சேவைகள் - 2024-09-01 முதல் 2025-08-31ஆம் திகதி வரைக்காகவும்.
2. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் விலைகள் கோரப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு பின்வரும் தகுதிகளைக் கொண்ட தகவுத்திறனைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - (அ) பாதுகாப்புச் சேவைகளுக்கான விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது அடிப்படைத் தகைமையாக அரச பாதுகாப்பு அமைச்சில் பதிவு பெற்ற நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   - (ஆ) துப்புரவேற்பாடு மற்றும் பாதுகாப்புச் சேவைகளுக்காக விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு செல்லுபடியாகும் பதிவைக் கொண்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   - (இ) விலைமனுக்கோரல் ஆவணங்களை மதிப்பீடு செய்யும்போது, விலைக்கோரல் ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளும் மதிப்பீடு செய்யப்படும்.
   - (ஈ) கடந்த ஐந்து வருடங்களினுள் குறைந்தபட்சம் 05 மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்ட வருடாந்த வருமானத்திற்கு இயைபான சேவை வழங்கலைப் பூர்த்த செய்திருத்தல் வேண்டும்.
4. மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா வைப்பொன்றை ரொக்கப் பணமாகச் செலுத்தி, கொழும்பு 07, ஸ்ரீமத் அனகாரிக தர்மபால மாவத்தை, 135 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ''தஹம்பாய'', புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை அனுப்புவதன் பேரில் இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் 2024-07-15ஆம் திகதி முதல் 2024.08.05ஆம் திகதி வரையான வாரத்தின் எந்தவொரு நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரையிலும் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
5. பூர்த்திசெய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பாதுகாப்புச் சேவைகளுக்கான விலைமனுக்கோரல் - 2024'' எனவும் ''சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டுச் சேவைகளுக்கான விலைமனுக்கோரல் - 2024'' எனவும் குறிப்பிட்டு 2024.08.06ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக் குறி பொறித்து விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு 07, ஸ்ரீமத் அனகாரிக தர்மபால மாவத்தை, 135ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் 3ஆம் மாடியிலுள்ள கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் நிறைவடைந்த உடன் அவைகள் திறக்கப்படும். இந்த விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.
6. விலைமனுக்கோரல் ஆவணங்களிலுள்ள மாதிரியைப் பயன்படுத்தி, மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட 25,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் பிணை முறியொன்றை அல்லது அதற்குச் சமமான தொகைக்குப் பெற்றுக்கொண்ட வங்கிக் கட்டளை அல்லது ரொக்கப் பணமாகச் செலுத்தப்பட்ட விலைமனுக்கோரல் பிணை முறியொன்றுடன் ஒப்படைத்தல் வேண்டும்.
7. மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து கொழும்பு 07, ஸ்ரீமத் அனகாரிக தர்மபால மாவத்தை, 135 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ''தஹம்பாய'', புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சின் கணக்கிடல் பிரிவின் 011-2303294 அல்லது 011-2307674/94 நீடிப்பு 308 எனும் தொலைபேசி இலக்கங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு,**
**''தஹம்பாய'',**
**ஸ்ரீமத் அனகாரிக தர்மபால மாவத்தை,**
**கொழும்பு 07.**

2024-07-15ஆம் திகதி

---

## மாநகர சபை
### பத்திரிகை அறிவித்தல்

**பதுளை மாநகர சபைக்குரித்தான ஹுணுகொட்டுவ வீதியில் அமைந்துள்ள சந்தைக் கட்டிடத்தொகுதியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள முதலாம் மாடியை நிர்மாணித்து அல்லது வெலேகடே சந்தைக் கட்டிடத்தொகுதியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள இரண்டாம் மாடியை நிர்மாணித்து 30 வருட காலத்திற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்களை உள்ளடக்கிய முன்மொழிவுகளைக் கோருதல்**

இதற்கு முன்வர ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் தமது விலைக்கோரல் விலைகளை உள்ளடக்கிய செயற்றிட்ட முன்மொழிவுகளை 2024-08-05ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், பெறுகைக் குழு, பதுளை மாநகர சபை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம்.

- இதற்கான விலைக்கோரல் விலைகளை உள்ளடக்கிய செயற்றிட்ட முன்மொழிவுகளை இலங்கைப் பிரஜைகள் மற்றும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றன.
- விலைமனுதாரர்களை அறிவுறுத்தும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-07-23ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பதுளை மாநகர சபையில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதுடன் அன்றைய தினம் குறித்த இடப்பரப்பை பரீட்சித்துப் பார்க்கலாம்.
- கேள்விப் படிவங்கள் மற்றும் அதற்கு இயைபான நிபந்தனை படிவங்களை 2024-07-15ஆம் திகதி முதல் 2024-08-04ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் 7500.00 ரூபா மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் குறித்த பணத்தை இலங்கை வங்கி பதுளை கிளையில் பேணப்படும் 2065726 எனும் கணக்கிலத்திற்கு வைப்புச் செய்து, குறித்த பற்றுச்சீட்டு உட்பட வேண்டுகோள் கடிதமொன்றை பதுளை மாநகர சபைக்குச் சமர்ப்பிப்பதன் பேரில் அல்லது பதுளை மாநகர சபையின் mcbadulla21@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி பணம் செலுத்தியதை உறுதி செய்ததன் பின் தருவித்துக்கொள்ளலாம். (தபால்/கூரியர் கட்டணங்களை விலைமனுதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்)
- பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பப் படிவத்தை உள்ளடக்கிய செயற்றிட்ட முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளல் 2024-08-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் விலைமனுக்கள் 2024-08-05ஆம் திகதி செயற்றிட்ட முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுவது நிறைவடைந்த உடனடுத்து பதுளை மாநகர சபையில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
- கேள்வி விலைகளை உள்ளடக்கிய செயற்றிட்ட முன்மொழிவுகளை 2024-08-05ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் பதுளை மாநகர சபைக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
- கேள்வி விலைகளை உள்ளடக்கிய செயற்றிட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும்போது பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், செயற்றிட்ட முன்மொழிவு மற்றும் ஏனைய ஆவணங்களின் மூலப் பிரதி மற்றும் அவற்றின் நகல் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். இதன்போது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளை வெவ்வேறான இரு கடித உறைகளில் இட்டு அவற்றில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனத் தெளிவாகக் குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''பதுளை மாநகர சபைக்குரித்தான ஹுணுகொட்டுவ வீதியில் அமைந்துள்ள சந்தைக் கட்டிடத்தொகுதியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள முதலாம் மாடியை குத்தகைக்கு வழங்குதல் 2024 / பதுளை மாநகர சபைக்குரித்தான வெலேகடே சந்தைக் கட்டிடத்தொகுதியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள இரண்டாம் மாடியை குத்தகைக்கு வழங்குதல் 2024'' என குறித்த விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயரை குறிப்பிட்டு நேரடியாக கொண்டுவந்து ஒப்படைக்கலாம் அல்லது தலைவர், பெறுகைக் குழு, பதுளை மாநகர சபைக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
- குத்தகைக்கு வழங்கப்படவுள்ள ஆதனம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| தொ. இல. | விபரங்கள் | மாதாந்த கேள்வித் தொகை (முதல் ஐந்து வருடங்களுக்கு) | சதுர அடிகள் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் பிணை வைப்புத் தொகை | ஒரு முறை செலுத்தப்படும் ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|---|---|
| 01 | ஹுணுக்கொட்டுவ வீதியில் அமைந்துள்ள சந்தைக் கட்டிடத்தொகுதி - நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள முதலாம் மாடி | ரூபா 150,000.00 (முதலாம் மாடி நிர்மாணிக்கப்படும் முதல் 06 மாத காலத்தினுள் மாதாந்த குத்தகை தொகை அறவிடப்பட மாட்டாது) | 3600 | ரூபா 7500.00 | ரூபா 100,000.00 | ரூபா 9,000,000.00 |
| 02 | வெலேகடே சந்தைக் கட்டிடத்தொகுதி - நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள இரண்டாம் மாடி | ரூபா 200,000.00 (இரண்டாம் மாடி நிர்மாணிக்கப்படும் முதல் 06 மாத காலத்தினுள் மாதாந்த குத்தகை தொகை அறவிடப்பட மாட்டாது) | 3400 | ரூபா 7500.00 | ரூபா 100,000.00 | ரூபா 12,000,000.00 |

- மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகைக்காக இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வங்கிப் பிணை முறியொன்றை 2024-11-05ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அது விலைமனு ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள மாதிரியாக மட்டும் இருத்தல் வேண்டும்.
- மேற்கூறிய ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதற்கு இயைபான 30 வருடங்களுக்காக செலுத்த வேண்டிய மாதாந்த வாடகை சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதுடன் (விண்ணப்பப் படிவத்தில் விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்களைப் பார்க்கவும்) ஒரு முறை செலுத்தப்படும் தொகைக்கு இயைபாக மேலே தரப்பட்டுள்ள ஆகக் குறைந்த தொகை குத்தகைதாரரால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இதற்குப் புறம்பாக முதலாம் / இரண்டாம் மாடிகளை குத்தகைதாரர்கள் தமது சொந்த நிதியைப் பயன்படுத்தி நிர்மாணித்துக்கொள்ள வேண்டும்.
- விண்ணப்பதாரர் தனிநபர் வியாபாரம் / கூட்டு வியாபாரம் / நிறுவனம் எனும் போது விண்ணப்பப் படிவத்துடன் பதிவுச் சான்றிதழின் பிரதிகள் மற்றும் நிறுவனம் எனும்போது நிறுவன கூட்டிணைப்பு படிவத்தின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் தனி நபர் விண்ணப்பதாரரானால் தேசிய அடையாள அட்டை / வெளிநாட்டுக் கடவுச் சீட்டு அல்லது சாரதி உரிமத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- சமர்ப்பிக்கப்படும் சகல விலைமனுக்களையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இது தொடர்பான மேலதிக விபரங்களை 0554934505 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பதுளை மாநகர சபை.**
**2024-07-15.**

புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகார அமைச்சு

# மத்திய கலாசார நிதியம்

## வெற்றிடங்கள்

புத்தசாசனம், சமய மற்றும் கலாசார விவகார அமைச்சின் கீழ் உள்ள மத்திய கலாசார நிதியத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக தகைமை வாய்ந்த தொழில்சார்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பணிப்பாளர் (அபிவிருத்தி) (வெற்றிட எண்ணிக்கை 01)

| | |
|---|---|
| **சம்பள அளவு** | **HM1-1** (ரூபா **80,295 - 15x2,270 - 114,345/-)** (மு.சே. சுற்றுநிருப இலக்கம் 2/2016) |
| **வயதெல்லை** | 30 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல. |

**கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக்கொண்ட தொல்லியல் அல்லது கட்டிடக்கலை தொடர்பான ஆரம்பப் பட்டத்துடன் தொல்லியல் அல்லது கட்டிடக்கலை தொடர்பில் பட்டப் பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

அரசு, அரச கூட்டுத்தாபனம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் திட்டத்தை வழங்குதல், அமுலாக்குதல், மதிப்பிடுதல் மற்றும் முன்னேற்ற நிர்வாகம் தொடர்பான கடமைகளுக்கு இயைபான முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவத்துடன் மிகச் சிறந்த சேவை பதிவைக் கொண்டிருத்தல். (இந்த 15 வருடத்தில் 05 வருடங்கள் பட்டப் பின்படிப்பு தகைமையைப் பெற்றுக்கொண்டன் பின்னராக இருத்தல் வேண்டும்.)

**ஆட்சேர்க்கும் முறை**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம்.

**நியமனத்தின் தன்மை**

01. புல்மோட்டை பொறித்தொகுதிக்கு புத்தம் புதிய Front End Wheel லோடர்களை வழங்குதல், விநியோகித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒப்படைத்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இராஜகிரிய, சரண மாவத்தை, 341/13ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுத் (DPC) தலைவர் அழைக்கின்றார்

| எண்ணிக்கை | பொருட்களின் விபரம் | தேவைப்படும் விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|---|
| 02 | புல்மோட்டை பொறித்தொகுதிக்கு புத்தம் புதிய Front End Wheel லோடர்களை வழங்குதல், விநியோகித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் ஒப்படைத்தல் | 1,000,000.00 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை ஊடாக விலைக்கோரல் செயற்பாடுகள் இடம்பெறும்.

03. இராஜகிரிய, சரண மாவத்தை, 341/13, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் 2024-07-15ஆம் திகதி முதல் 2024-08-05ஆம் திகதி வரை எந்தவொரு வேலை நாளிலும், மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அதே முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

    தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கங்கள் 011-2882025/2883951/2883952

04. இராஜகிரிய, சரண மாவத்தை, 341/13, இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் வழங்கல் முகாமையாளருக்கு ஒரு எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மீளளிக்கப்படாத கட்டணமாக இருபதாயிரம் ரூபாவை (ரூ. 20,000.00) ரொக்கப் பணமாக செலுத்துவதன் மூலம் 2024-07-15ஆம் திகதி முதல் 2024-08-05ஆம் திகதி வரை மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (DPC), மே/பா இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட், 341/13, சரண மாவத்தை, இராஜகிரிய எனும் முகவரிக்கு 2024-08-07ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு திறப்பில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டதன் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

06. விலைமனுக்கள் 2024-08-06ஆம் திகதி முதல் 2024-11-05ஆம் திகதி வரை அல்லது நீடிக்கப்படும் எந்தவொரு காலத்திற்கும் செல்லுபடியாதல் வேண்டும்.

07. சகல விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் பெயரிலான 2024-08-06ஆம் திகதி முதல் 2024-11-19ஆம் திகதி வரையில் அல்லது நீடிக்கப்படும் எந்தவொரு காலத்திற்கும் செல்லுபடியாகும் வகையில் விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்,**
**341/13, சரண மாவத்தை, இராஜகிரிய.**

---

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

# விலைமனுக்களை சமர்ப்பிக்கும் காலத்தை நீடித்தல்

## முதலீட்டு சந்தர்ப்பங்கள்

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு உரிமையுள்ளதும் கொழும்பு துறைமுகத்தினுள்ளே அமைந்துள்ள பெறுமதியுள்ள காணிப்பரப்பை சர்வதேச துறைமுகம் தொடர்பான சேவை வழங்கல் நிலையத்திற்கு குத்தகைக்கு வழங்கல்

01. கொழும்பு துறைமுகத்தின் ஆழநீர் கொள்கல முனையங்களுக்கு அண்மையில் அமைந்துள்ள 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் சர்வதேச துறைமுகங்கள் தொடர்பான சேவை வழங்கல் நிலையமொன்றை செயற்படுத்த விரும்புகிறவர்களிடமிருந்து சாத்தியமான விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது அழைப்பதற்கு விரும்புகின்றது.

02. ஆர்வமுள்ள சாரார் கீழே கூறப்பட்டுள்ளவாறு கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை இதுஅ இடமிருந்து பெற்றுக் கொண்ட பின்னர் விலைமனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

03. வார நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 2024.07.31 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணி வரையும் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 464ஏ ஆம் இலக்க HQ கொழும்பு கட்டிட 8 ஆம் மாடியின் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் காணி முகாமைத்துவ பிரிவு பிரதான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டி ஆவணம் ஆகியவற்றை, கேள்வியிடக்கூடிய வரிகள் அல்லது நிருவாக அறவீடுகளின் ஆகுசெலவாக மீளளிக்கப்படாத தொகையாக 100,000 ரூபா அல்லது 325 அஜடொ செலுத்திய பின்னர், பெற்றுக் கொள்ளலாம்.

04. விலைமனுக்கூறல் முறியின் தொகையானது 1 மில்லியன் அஜடொ என்பதுடன் நிபந்தனையற்ற உத்தரவாதங்களுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட, இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது இதுஅ இன் நிதிப் பிரிவிற்கு ரொக்கப்பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

05. தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.

06. ஆரம்ப குத்தகை ஒப்பந்த காலமானது 35 வருடங்களாகும்.

07. உள்ளூர் இறக்குமதி அல்லது உள்ளூர் ஏற்றுமதி மற்றும் பலநாடுகள் ஒன்றிணைந்த உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றிற்கான தண்டப்பண விகித பணக்கொடுப்பனவுகள் கேள்வி விண்ணப்பங்களில் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

08. விலைமனுதாரரின் நிதி நிலைமையை உறுதி செய்வதற்காக விலைமனுதார் கீழே வழங்கப்பட்டுள்ள தகைமைகளுக்கான ஆகக் குறைந்த தகவுத்திறனையை திருப்திப்படுத்தல் வேண்டும்.

    ஏ) தகுதிக்காக முன்னைய நிதி ஆண்டுகளில் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளின் வருடாந்த வருமானமானது 15 பில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும். அதே காலப்பகுதிக்காக வெளிநாட்டு அமைப்புகள் வருடாந்த நிதிப்புரள்வாக 50 மில்லியன் அஜடொ ஐ கொண்டிருத்தல் வேண்டும். கூட்டு ஆதனங்களின் வருமானது கணக்காய்வு செய்யப்பட்ட நிதியிடல் அறிக்கைகள் 15 பில்லியன் ரூபாவை விஞ்சினால் மாத்திரமே கூட்டு ஆதனங்கள் அனுமதிக்கப்படும்.

09. விலைமனுக்கள் பாதுகாப்பு முத்திரைக்குறி இடப்பட்ட தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "LEASE OF VALUABLE LAND AREA INSIDE THE PORT OF COLOMBO BELONGING TO SRI LANKA PORTS AUTHORITIES FOR THE PURPOSE OF INTERNATIONAL PORT RELATED SERVICE SUPPLY CENTER (Ref. No. SLPA/PREM/03/06/2024)" என குறிப்பிடப்பட்டு இடப்பரப்புகள் மற்றும் காணி அபிவிருத்தி பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடப்படல் வேண்டும்.

    **விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய முகவரி:**
    **பிரதான முகாமையாளர் (இடப்பரப்புகள் மற்றும் காணி முகாமைத்துவம்),**
    **இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
    **5 ஆம் மாடி, தலைமையக கொழும்பு கட்டிடம்,**
    **இல. 464ஏ, T.B. ஜாயா மாவத்தை**
    **கொழும்பு-10.**

10. விலைமனுக்கள் 2024.08.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். 2024.08.01 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு முன்மொழிவுகள் கேள்விச் சபையினால் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இடப்பரப்புகள் மற்றும் காணி முகாமைத்துவ பிரிவில் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

11. இது தொடர்பான மேலதிக விபரங்கள் 0711732275, 0718158465 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பதில் கடமையாற்றும் பிரதி பிரதான முகாமையாளரிடமிருந்து (இடப்பரப்புகள் மற்றும் காணி முகாமைத்துவம்) பெற்றுக் கொள்ளலாம்.

12. இந்த விலைமனுக்கோரல் செயற்பாட்டிற்கான எந்தவொரு நிகழ்வு தொடர்பாக எந்தவொரு சாராருக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவிற்கான எந்த கடப்பாட்டையும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது ஏற்றுக் கொள்ளாது.

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்



**119**

### பஸ்கள், லொறிகள்

விற்பனைக்கு

EP LJ-8001 FAW TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216 திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும் 046970

NC-GF-1181-MAZDA-BONGO-BRAWNY - CREW CAB - 1996 - WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட், 187, கட்டுகஸ்தோட்ட வீதி, கண்டி. 047314

NW DAE-9367 MAHINDRA JEETO TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216 திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும் 046949

PP-7005 TATA ACE 2010 கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு -03. தொ.பே. 0714-542958. 047289

SP PS-4488 MAHINDRA MAX X IMO TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216 திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும் 046964

SP PW-3184 DFSK UNIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி, 0770107270, 0774789216. திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 046947



WP PQ-7684 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216 திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும் 046955

68-0465 TOYOTA DYNA TRUCK அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216 திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 046952



**122**

### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

BGI-5149 Honda Dio 2018 Motor cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு -03. தொ.பே. 0711 210810. 047280

SG QK-7017 PIAGGIO APE THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216 திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும் 046958

WP YM-4224 PIAGGIO APE THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 0770107270, 0774789216 திங்கட்கிழமை யிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும் 046968

YM-5356 Bajaj 2011 YW-7769 Bajaj 2012, QF-5535 Bajaj 2006 Threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு -03. தொ. பே. 0711-210810. 047284



**128**

### டயர்கள், டியூப்புகள்

டயர் டியூப் ஒரே கூரையின் கீழ் சகல டயர் போக்லிப்ட், கல், காற்று, டயர் இருக்கும் இடத்திற்கு போக்குவரத்து ரிச்சட் பீரிஸ், ஆர்பிடெக் டயர் நிரப்புவதற்கு வழங்கப்படாத 700x16 750716700x20-1000x20.155 கிரவுன் டயர், கொழும்பு -14. 0773134060 044411

### வேலைவாய்ப்பு



**312**

### வெற்றிடங்கள்

தொழில் நுட்பம்

சுத்திகரிப்பு ஆண்/பெண் ஊழியர் வெற்றிடங்கள். 20 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் இலவசம். சீருடை இலவசம். கவர்ச்சியான சம்பளத்துடன் மேலதிக நேர கொடுப்பனவுகள். சுத்திகரிப்பு மற்றும் பராமரித்தல் வேலைகள் பற்றிய அனுபவம் மற்றும் கடும் நம்பிக்கை, ஆர்வம் உள்ள உங்களுக்கு கல்வித் தகைமைகள் முக்கியமில்லை. அழையுங்கள் தொ.பே. இலக்கம் - 0766845349. (நாட்டின் எப்பாகத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.) 046170

---

# சுகாதார சேவைகள் திணைக்களம்
# புதிய மாவட்ட பொது வைத்தியசாலை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

CCTV கமரா முறைமை மற்றும் வலையமைப்பு (Network) முறைமையை ஒரு வருட காலத்திற்கு சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல்.

கம்புறுகமுவ புதிய மாவட்ட பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் CCTV கமரா முறைமை மற்றும் வலையமைப்பு (Network) முறைமை மற்றும் அதில் அடங்கியுள்ள துணைப்பாகங்களுக்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. விபரக்குறிப்புகள் சகிதம் உருப்படிகளின் முழு விபரங்களுடனான பட்டியலொன்று விலைமனுக்களுடன் பெற்றுக்கொள்ளலாம். பரிசீலனைப் பட்டியல், விபரமான கடிதப்பரிமாற்றம் / ஆவணங்கள், பயனர் கையேடு, விற்பனைக்குப் பின் சேவை வழங்கும் இயலுமை மற்றும் தற்போது கைவசமுள்ள தொகை என்பவற்றை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. விலைமனுதாரர் விலைமனுக்களுடன் ஆவணரீதியான சாட்சிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. மீளளிக்கப்படாத 1,500.00 ரூபா கட்டணத்தை மாத்தறை புதிய மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் செலுத்தியதன் பின் 2024-07-15ஆம் திகதி முதல் 2024-08-04ஆம் திகதி வரையில் கடமை நேரங்களில் புதிய மாவட்டப் பொது வைத்தியசாலையிலிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''CCTV கமரா முறைமை மற்றும் வலையமைப்பு (Network) முறைமையை ஒரு வருட காலத்திற்கு சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. விலைமனுக்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முகவரி: பெறுகைக் குழுவின் தலைவர், மாவட்டப் பொது வைத்தியசாலை, மாத்தறை ஆகும்.

06. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் 2024-08-05ஆம் திகதி மு.ப. 10.00 மணியாகும்.

**தொலைபேசி - 0412235712/13/14**
**தொலைநகல் - 0412235716**
**மின்னஞ்சல்: dghmataraunit2@gmail.com**

**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மாத்தறை.**

---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்கம்**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**பெறுகை நிறுவனத்தின் பெயர்** : தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
**ஒப்பந்தத் தலைப்பு** : தே.வீ.அ.அ. இல் 50 KW (AC) சூரிய சக்தி மின் பிறப்பாக்கி முறைமையின் வழங்கல், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் விற்பனைக்குப் பின்னரான சேவைகள்
**ஒப்பந்த (விலைமனு) இலக்கம்** :

1. கீழ் விபரிக்கப்பட்டவாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் 50 KW (AC) சூரிய சக்தி மின்பிறப்பாக்கி முறைமையின் வழங்கல், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் விற்பனைக்குப் பின்னரான சேவைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, தலைவரின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத், தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. நிர்மாணக் காலம் ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து 60 நாட்கள் என்பதோடு மதிப்பிடப்பட்ட செலவு ரூபா 13.80 மில். (வெட் இன்றி) ஆகும்.
2. தேசிய போட்டிரீதியிலான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இலங்கை Solar PV சேவை வழங்குநர் ஒருவராக நிலைபெறுதகு வலு அதிகாரசபையுடன் (SLSEA) பதிவு செய்யப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் வழங்குதற்கான தகைமைக்கு தேவையான தகுதிகளில் உள்ளடங்குவன மட்டுப்படுத்தப்படவில்லை:
    a. இலங்கை Solar PV சேவை வழங்குநர் ஒருவராக நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்காக (SLSEA) பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனம் ஒன்றாக இருத்தல்.
    b. ஒப்பந்ததாரராக விலைமனுதாரர் கடந்த 3 ஆண்டுகளுக்குள் முன்மொழியப்பட்ட குறைந்தது 05 சூரிய சக்தி முறைமையை நிறுவி இருத்தல் வேண்டும்.
    c. திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகள் 10.35 மில். இற்கு குறையாதிருத்தல் வேண்டும். அண்மித்த கடந்த 03 ஆண்டுகளுக்காக நிரூபித்த நிதி ஸ்திரத்தன்மையின் (கணக்காய்வுக்கு உட்பட்ட கணக்குகள்) ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
    d. இலங்கையில் கடந்த ஐந்து (05) ஆண்டு காலத்தில் சூரிய சக்தி மின் பிறப்பாக்கி முறைமையில் முறையே 20 மில். இ. ரூபா குறைந்தபட்ச சராசரி ஆண்டுப் புரள்வை பெற்றிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் எந்த ஒரு வேலை நாட்களிலும் 9.00 மணி தொடக்கம் 16.00 மணி வரை பிரதிப் பொது முகாமையாளர் (ES & C), 3ஆவது மாடி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு 02 என்ற முகவரியில் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும் (தொ.: 011-2389510, தொலைநகல்: 011-2438130)
6. தே.வீ.அ.அ. இன் சிறாப்பருக்கு 5000 ரூபா மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றாக ரொக்கப்பணத்தில் செலுத்தி 2024.07.15 ஆம் திகதி தொடக்கம் 2024.08.02 ஆம் திகதி வரை 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கொழும்பு 02, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, 3ஆவது மாடி, பிரதிப் பொது முகாமையாளருக்கு (ES & C) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.
7. விலைமனுக்களை 2024.08.05 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் பிரதிப் பொது முகாமையாளர் (ES & C), 3ஆவது மாடி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு 02 என்ற முகவரிக்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவடைந்த பின் அவை உடன் திறக்கப்படும்.
8. விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்குப் பின்னர் 91 நாட்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் 2024.11.11 ஆம் திகதி வரை செல்லுபடியான 138,000 ரூபாவின் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
10. a) விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மற்றும் தளப் பயணம் தே.வீ.அ.அ. தலைமை அலுவலகத்தில் 2024.07.24 ஆம் திகதி 10.00 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
    b) இந்த விலைமனுவுக்கு முந்திய சந்திப்புக்கு அனைத்து விலைமனுதாரர்களின் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படுகிறது.
    c) இந்தக் கூட்டத்திற்கு முன்னர் ஒரு வாரம் தாமதிக்காது தொழில் வழங்குநருக்கு கிடைப்பதற்கு முடிந்தவரை எழுத்தில் அல்லது தொலைநகல் மூலம் ஏதேனும் கேள்விகள் இருந்தால் சமர்ப்பிப்பதற்கு விலைமனுதாரர் கோரப்படுகிறார்.

**மேல் குறிப்பிடப்பட்ட முகவரியான**
**பிரதிப் பொது முகாமையாளர் (ES & C), 3ஆவது மாடி,**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, கொழும்பு 02.**
**தொலைநகல்: 0112438130**

---

# அறிவித்தல்

## லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவிற்கான கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை – 2025

2025 ஜனவரி 01ம் திகதி தொடக்கம் 2025 ஜனவரி 31ம் திகதி வரையுள்ள காலப்பகுதியின் கீழ் லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில் புளித்த கள்ளினை சில்லறை விலைக்கு விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் என்னால் கோரப்படுகின்றன.

02. 2392 இலக்கத்தினையுடைய இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமானியில் 2024.07.05ம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.08.21ம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் லுணுகலை பிரதேச செயலாளருக்கு கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாக கையளிக்கவும். மேலும் அன்றை தினம் திருப்திகரமான கொள்வனவாளர் முன்வராவிடின் கேள்விப்பத்திரம் மீண்டும் விற்பனைக்கு விடப்படும். அதற்கான விண்ணப்பங்கள் 2024.09.19ம் திகதி மு.ப. 10.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**எஸ். புவனேந்திரன்,**
**பிரதேச செயலாளர்,**
**லுணகலை.**

2024.07.11ம் திகதி
**பிரதேச செயலகம்,**
**லுணுகலை.**

---

# 2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 5 எனும் நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

இல. 47/எல்/59 சமித்புர மட்டக்குளிய, கொழும்பு 15 என்ற முகவரியில் வசிக்கும் தே.அ.அ.இல. 198884203036 கொண்ட விஜேசிங்ஹ ஆரச்சிலாகே நிரோஷனீ என்பவரின் பெயரில் பதிவு செய்துள்ள கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள சகல சொத்துக்களையும் அகற்றுதல் அல்லது கையகப்படுத்தலை தவிர்க்கும் முகமாக 2024.03.27ம் திகதி குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்ட விரோத சொத்துக்கள் விசாரணை பிரிவின் பொலிஸ் அதிகாரி ஒருவரால் 2011 இல. 40இன் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் விநியோகிக்கப் பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை கம்பஹா உயர் நீதி மன்றத்தினால் 03/2024 பல்வேறு/ விசேட என்ற வழக்கின் கீழ் 2024.04.02ம் திகதி உறுதி செய்யப்படுகிறது. அவ்வாறு உறுதி செய்யப்பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை மேற்படி சட்டத்தின் 8(2) பிரிவின் பிரகாரம் 2024.07.02ம் திகதி வரை 03 மாதங்கள் அமுல்படுத்தப்படுமாறு மேலும் நீடித்து கௌரவ நீதிமன்றத்தினால் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீடிக்கப்பட்ட மேற்படி செயற்பாடற்றதாக்கும் கட்டளை 2024.07.02 முதல் தொடர்ந்தும் மேலும் நீடிப்பதற்கு வாய்ப்பு உண்டு அத்துடன் ஏதாவது அடிப்படையில் குற்றப் பத்திரிகைகள் உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் முன்வைக்கப்படும் வேளையில் மேற்படி செயற்பாடற்றதாக்கும் கட்டளை வழக்கு விடயங்கள் முடிவுறும் வரை அமுலில் இருக்கும். அதன் பிரகாரம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ள சொத்துக்களின் தமது உரிமை கோரலை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகளை வழங்கும் முகமாக இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மேல் மாகாண, கம்பஹா மாவட்டத்தின் சியனே கோரளை அதிகாரி பத்துவின் மஹர பிரதேச சபை மற்றும் மஹர பிரதேச செயலாளர் பிரிவிற்குச் சொந்தமான இல. 249 பஹல கரகஹமுன கிராம சேவை பிரிவிற்குள் பஹல கரகஹமுனவில் வசிக்கும் மில்லிகஹவத்த எனும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. டி.சி.எம். விமலரத்னவினால் 2024.03.24ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 56/2014 என்ற வரைபடத்தின் பிரகாரம் தரப்படுகின்ற 'வை' எழுத்துடைய காணிப் பகுதிக்கு எல்லைகளான

**வடகாக** : டீ. சோமபாலவுக்கு உரித்தான காணியும்
**கிழகாக** : பாதையும்
**தெற்காக** : எரிக்கா பிலிப்ஸ் மற்றும் கே. சந்ரரத்ன என்பவருக்கு உரித்தான காணியும்
**மேற்காக** : லொட் 'எக்ஸ்' உம்

என்ற எல்லைகளில் பதினொன்று தசம் ஐந்து பூச்சியம் (ஏ:0 ரூ.0 பேர்ச் 11.50) கொண்ட காணி மற்றும் அதற்குள் அமைந்துள்ள மரங்கள், பழங்கள், கட்டிடங்கள் போன்ற சகலதும் உடையதாகும்.

# விலைகோரலுக்கான அழைப்பு (IFB)
# மேல் மாகாண சபை - பொறியியல் செயலணி

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்காக இயைபுடைய பிரதேச பொறியியலாளர் / பணிப்பாளர் (கட்டிடங்கள்) பெறுகைக் குழுத் தலைவரினால் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2. I. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் ஒப்பந்ததாரர்கள் தெரிவு செய்யப்படுவர். 04/2016(iii)ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
   II. 01/2024ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை இந்தப் பெறுகைக்கு ஏற்புடையது.

| (1) தொ. இல. | (2) ஒப்பந்தத்தின் இலக்கம் | (3) வேலையின் பெயர் | (4) நேரடி மதிப்பீட்டுக் கிரயம் | (5) 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | (6) CIDA பதிவு | (7) மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | (8) மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறி | (9) விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | WP/PU/CON/24/302 | பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் உள்ள மருந்து ஆலோசகர் விடுதியைப் புதுப்பித்தல் - கட்டம் II | 4,054,282.66 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஸ்ரீ மகா விஹார வீதி, பாணந்துறை.<br>T.P -: 038-2234774 |
| 2 | WP/PU/CON/24/303 | பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் உள்ள 01ஆம் இலக்க வார்டை மேம்படுத்துதல் | 9,282,780.35 | ஆம் | C7 மற்றும் C6 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 57,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 115,000.00 | |
| 3 | WP/PU/CON/24/304 | மேமா/ஹொர/கஹவில க.வி. - 60'x20' கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 4,590,027.95 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 28,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 56,800.00 | |
| 4 | WP/PU/CON/24/305 | ஹல்தொட்ட மாவட்ட வைத்தியசாலையில் மருந்து களஞ்சிய சாலையை மேம்படுத்துதல் மற்றும் ஏனைய மேம்படுத்தல்கள் (மருந்துக் களஞ்சியசாலையின் திருத்தவேலைகள் மற்றும் மருந்தகத்தின் பகுதிபிரிப்பு வேலைகள்) | 2,424,716.50 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 30,000.00 | |
| 5 | WP/PU/CON/24/306 | மேமா/ஹொர/ஸ்ரீ சாரலங்கார மகா வித்தியாலயம் - 100"x20" கட்டிடத்தின் அவசர கூரை திருத்தவேலைகள் | 3,379,830.50 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 20,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 40,000.00 | |
| 6 | WP/PU/CON/24/307 | அலுபோமுல்ல எஸ். மகிந்த வித்தியாலயத்தில் உள்ள பாதுகாப்பற்ற அணைக்கட்டிற்கு 110"x30" மூன்று மாடிக் கட்டிடத்திற்கு அருகில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் | 4,850,170.00 | இல்லை | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 30,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 60,000.00 | |
| 7 | WP/PU/CON/24/308 | மேமா/மத்து/மிதலன ஆ.வி. - 100'x20' கட்டிடம் சகிதம் கூரை திருத்தவேலைகள் | 4,016,146.20 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மத்துகம. மத்திய வீதி, மத்துகம.<br>தொலைபேசி இல. 034-2243082 |
| 8 | WP/PU/CON/24/309 | மத்துகம பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு 65"x40"மூன்று மாடி அலுவலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (கட்டம் 7) | 11,637,954.39 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 73,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 147,000.00 | |
| 9 | WP/PU/CON/24/310 | மேமா/களு/போம்புவல ஸ்ரீ தர்மாலோக்க ம.வி. - 110'x20' பிரதான மண்டபக் கட்டிடத்தின் திருத்தவேலைகள் (கட்டம் 1) | 3,306,638.50 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 20,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 40,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் களுத்துறை, சுமங்கள வீதி, களுத்துறை வடக்கு.<br>தொலைபேசி இல. 034-2237002/ 034-2237349 |
| 10 | WP/PU/CON/24/311 | மேமா/களு/கலமுல்ல ரோமன் கத்தோலிக்க க.வி. - பிரதான மண்டபக் கட்டிடத்தின் அவசர கூரை திருத்தவேலைகள் | 3,588,898.70 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 22,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 44,000.00 | |
| 11 | WP/PU/CON/24/312 | மேமா/களு/மியூசியஸ் க.வி. - 120'x20' கட்டிடத்தின் மேம்படுத்தல்கள் மற்றும் நிலச்சீராக்கம் | 4,867,397.81 | இல்லை | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 30,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 60,000.00 | |
| 12 | WP/PU/CON/24/313 | மேமா/களு/எலதுவ க.வி. - 80'x20' கட்டிடத்தின் திருத்தவேலைகள் | 1,688,868.10 | இல்லை | ஊ9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 10,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 20,000.00 | |
| 13 | WP/PU/CON/24/314 | மேமா/களு/பொத்துவில ம.வி. - 5000 லீற்றர் நீர்த் தாங்கிக்கு Water Trestle நிர்மாணித்தல் | 2,061,441.05 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 12,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 25,000.00 | |
| 14 | WP/PU/CON/24/315 | மேமா/கொழு/அரதுசா வித்தியாலயம் - 80'x25' ஒற்றை மாடி வகுப்பறைக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 2,065,951.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 12,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 25,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 151/4/2/1, மாளிகாவத்த பிளேஸ், மாளிகாவத்தை, கொழும்பு-10.<br>தொலைபேசி-: 011-2447773 |
| 15 | WP/PU/CON/24/316 | கொழும்பு வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள கல்வி அபிவிருத்திக் கிளையைப் புதுப்பித்தல் | 14,637,957.00 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 90,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 180,000.00 | |
| 16 | WP/PU/CON/24/317 | சுசமயவர்தன வித்தியாலயத்திலுள்ள பாடசாலைக் கட்டிடத்தின் அவசர திருத்தவேலைகள் | 6,385,931.80 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 39,000.00<br>விலைக்கோரல் பிணை முறிரூபா 78,000.00 | |
| 17 | WP/PU/CON/24/318 | மேமா/ஜய/ M.D.H. ஜயவர்தன வித்தியாலயம் - 90'x25' மூன்று மாடிக் கட்டிடத்தின் கெனபி கூரையை நிறைவுசெய்தல் - கட்டம் 11 | 4,084,205.94 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 25,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பத்தரமுல்ல, தெபானம, பன்னிபிட்டிய.<br>தொலைபேசி 011-2844354 |
| 18 | WP/PU/CON/24/319 | மேமா/ஜய/அம்பதலே சமுத்ராதேவி மகளீர் வி. - தற்போதுள்ள 70' x 25' மூன்று மாடிக் கட்டிடத்தை தகர்த்தல் | 1,170,761.80 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 7,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 14,300.00 | |
| 19 | WP/PU/CON/24/320 | மேமா/ஜய/தர்மவிஜய வித்தியாலயம் - பாடசாலைக் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகளின் அத்தியாவசிய திருத்தவேலைகள் | 11,320,564.00 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 70,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 140,000.00 | |
| 20 | WP/PU/CON/24/321 | மேமா/ஜய/வித்யாகார மகளீர் வித்தியாலயம் - 90"x25" கட்டிடத்தை நிர்மாணித்தல் | 20,958,688.45 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 25,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 250,000.00 | |
| 21 | WP/PU/CON/24/322 | டி சொய்சா மகா வித்தியாலயத்திலுள்ள 90"x25" மூன்று மாடிக் கட்டிடத்தின் கட்டமைப்பு திருத்தவேலைகள் | 1,223,077.90 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 7,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 15,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இரத்மலானை.<br>இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை.<br>தொலைபேசி இல. 0112-622517 |
| 22 | WP/PU/CON/24/323 | மொரட்டுவ சென் செபஸ்தியன் மகளீர் கல்லூரியில் உள்ள 90" x25" மூன்று மாடிக் கட்டிடத்தின் மின்சார திருத்தவேலைகள் | 764,631.00 | இல்லை | EM-5 மற்றும் அதற்கு மேல் | 1,000.00 | பண வைப்பு - ரூபா 4,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 8,000.00 | |
| 23 | WP/PU/CON/24/324 | கெஸ்பாவ - ஆயுர்வேத வைத்தியசாலையில் உள்ள ஒற்றை மாடிக் கடடிடத்தின் 01ஆம் இலக்க வார்டின் (21" 0"x102" 0") புதுப்பித்தல் வேலைகள் | 7,842,961.17 | ஆம் | C7 மற்றும் C6 | 1000.00 | பண வைப்பு - ரூபா 48,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 97,000.00 | |
| 24 | WP/PU/CON/24/325 | மெத் செவனயில் உள்ள மூன்று மாடிக் கட்டிடத்தின் சிறிய திருத்தவேலைகள் | 3,504,997.75 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 22,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 43,500.00 | |
| 25 | WP/PU/CON/24/326 | மேமா/பிலி/மாம்பே தர்மராஜ வித்தியாலயம், பிலியந்தலை - மூன்று மாடி மெத்தானந்த கட்டிடத்தின் கூரை மற்றும் கட்டமைப்பு திருத்தவேலைகள் (65"x45" L வடிவம்) | 982,210.80 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 6,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 12,000.00 | |
| 26 | WP/PU/CON/24/327 | மேமா/பிலி/ஹெடிகம ஸ்ரீ சுதர்சன வித்தியாலயம் - பழைய அதிபர் அறையின் கூரை திருத்தவேலைகள் (20"- 0"x20"- 0") | 680,340.15 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 4,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 8,500.00 | |
| 27 | WP/PU/CON/24/328 | நுகேகொட - சென் ஜோன்ஸ் கல்லூரியில் மலசலகூட தொகுதியை நிர்மாணித்தல் | 873,661.34 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 4,500. 00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 9,000.00 | |
| 28 | WP/PU/CON/24/329 | மேமா/பிலி/பிலிப் ஆட்டிகல மகா வித்தியாலயம் - 90"x25"மூன்று மாடிக் கட்டிடத்தின் (தரம் 8, 12)கட்டமைப்பு மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | 3,798,277.15 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 23,500.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 47,000.00 | |
| 29 | WP/PU/CON/24/330 | மீகொட ஆயுர்வேத வைத்தியசாலையில் உள்ள நிர்வாகக் கட்டிடத்தின் (இரண்டு மாடி) புதுப்பித்தல் வேலைகள் | 43,415,947.60 | ஆம் | C5 மற்றும் C4 | 12,500.00 | பண வைப்பு - ரூபா 290,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 580,000.00 | வழங்குதல்: பிரதேச பொறியியலாளர், அலுவலகம், ஹோமாகம, நீதிமன்ற வீதி, ஹோமாகம. தொலைபேசி 011-2855719<br>சமர்ப்பித்தல்: பணிப்பாளர் (கட்டங்கள்), பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. 011-2092504 |
| 30 | WP/PU/CON/24/331 | மேமா/ஹோ/ஸ்ரீ பியரத்தன ம.ம.வி. - மூன்று மாடி கட்டமைப்பு திருத்தவேலை செய்யப்பட்ட கட்டிடத்தின் மிகுதி வேலைகள் ( 90" x 25" ) | 16,114,299.61 | ஆம் | C6 மற்றும் C5 | 3,500.00 | பண வைப்பு - ரூபா 105,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 210,000.00 | பிரதேச பொறியியலாளர்,<br>பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹோமாகம, நீதிமன்ற வீதி, ஹோமாகம.<br>தொலைபேசி 011-2855719 |
| 31 | WP/PU/CON/24/332 | ஓவிட்டிகம - போதிராஜ தேசிய பாடசாலையின் மிகுதி நிர்மாண வேலைகள் (கட்டம் iii) | 7,344,417.10 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 45,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 90,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா.<br>தொலைபேசி இல. 033-2222515 |
| 32 | WP/PU/CON/24/333 | கம்பஹா - சுகாதார சேவைகள் மருத்துவ அதிகாரி கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் | 5,495,823.75 | ஆம் | C7 மற்றும் C6 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 36,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 72,000.00 | |
| 33 | WP/PU/CON/24/334 | அம்பேபுஸ்ஸ விவசாயப் பயிற்சி நிலையத்தில் உள்ள KIOSK பிரிவிற்கான வாகன முற்றவெளியை புதுபித்தல் மற்றும் பாதுகாப்புப் பெட்டியை அமைத்தல் | 1,950,156.80 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 12,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 24,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட.<br>வலயக் கல்வி அலுவலகம், மினுவாங்கொட.<br>தொலைபேசி இல. 0112-296418 |
| 34 | WP/PU/CON/24/335 | மேமா/கள/சங்கமித்த ம.வி. - 40" x 50" இரண்டு மாடி நூலகக் கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | 2,851,500.00 | இல்லை | C8 மற்றும் C7 | 1,000.00 | பண வைப்பு - ரூபா 18,000.00<br>விலைக்கோரல் பிணை முறி ரூபா 36,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பியகம, உடுபில வீதி, மாகொல, பியகம.<br>தொலைபேசி: 011-2962091 |

3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தை (20, 29 மற்றும் 30 நீங்கலாக) 2024-07-15ஆம் திகதி முதல் 2024-07-29ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மற்றும் (20, 29 மற்றும் 30ஆம் இலக்கத் திட்டங்களுக்கு) 2024-07-15ஆம் திகதி முதல் 2024-08-05ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாண சபைக்கு செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய அலுவலகத்திற்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) (20, 29 மற்றும் 30ஆம் இலக்க திட்டங்கள் தவிர்ந்தவைக்கு) 2024-07-30ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் மற்றும் ((20, 29 மற்றும் 30ஆம் இலக்கத் திட்டங்களுக்கு) 2024-08-06ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 08ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.

8. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 05ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**பொறி. K. R. அபேசிறிவர்தன,**
**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்),**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

2024-07-12.

**தொலைபேசி: 0112-092504 தொலைநகல்: 0112-092505**

# இந்திய அணியின் இலங்கை சுற்றுப்பயணத்தில் மாற்றம்




இந்திய அணியின் இலங்கை சுற்றுப்பயணத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. முன்னர் ஜூலை 26 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்து டி20 தொடர் ஜூலை 27 ஆம் திகதிக்கு மாற்றம் கொண்டுவரப்பட்டிருப்பதோடு ஒருநாள் தொடரும் ஒருநாள் பின்தள்ளி ஓகஸ்ட் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்திய அணி மூன்று டி20 மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடுவதற்காகவே எதிர்வரும் ஜூலை 22 ஆம் திகதி இலங்கை வரவுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட இருதரப்பு போட்டி ஒன்றில் ஆடுவதற்காக இந்திய அணி இலங்கை வருவது மூன்று ஆண்டுகளில் இது முதல் முறையாகும்.

டி20 உலகக் கிண்ணத்திற்குப் பின்னர் சனத் ஜனசூரிய இடைக்காலப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில் இலங்கை அணி இந்தியாவை எதிர்கொள்ளவுள்ளது. அதேபோன்று இலங்கை டி20 அணியின் தலைவர் வனிந்து ஹசரங்க பதவி விலகிய நிலையில் புதிய தலைவர் ஒருவருடனேயே இலங்கை அணி உலக சம்பியனான இந்தியாவை எதிர்கொள்ளவுள்ளது.

அதேபோன்று ராகுல் டிராவிட் டி20 உலகக் கிண்ணத்துடன் பதவி விலகிய நிலையில் புதிய தலைமை பயிற்சியாளராக கௌதம் காம்பீர் நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில் இந்திய அணியின் முதல் தொடராக இது அமையவுள்ளதோடு, ரோஹித் ஷர்மா டி20 சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றிருப்பதால் புதிய தலைவர் ஒருவருடனேயே இந்திய டி20 அணி ஆடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சுற்றுப்பயணத்திற்கான இந்திய அணி இந்த வாரம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் போட்டி அட்டவணையில் புதிய மாற்றங்களை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. இதன்படி இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று டி20 போட்டிகளும் ஜூலை 27, 28 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இந்த மூன்று போட்டிகளும் பல்லேகலயில் இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து இரு அணிகளும் மோதும் ஒருநாள் சர்வதேச போட்டிகள் பகலிரவு ஆட்டங்களாக கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் ஓகஸ்ட் 2, 4 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடைபெறும்.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலக அணி சம்பியன்

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்



அட்டாளைச்சேனை கலை வட்டத்தின் 20ஆவது வருட நிறைவையொட்டி நடைபெற்ற "கோல்டன் கிரிக்கெட் கிண்ணம் 2024 " கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கிரிக்கெட் அணி சம்பியனாகியது.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (13) நடைபெற்ற இச் சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக அணியினர் 23 ஓட்டங்களினால் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அணியை வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பேருவளை கிரிக்கெட் தொடர் ஜூலை 20இல்

பேருவளை சீனன் கோட்டை தம்புள்ள டேன்சரஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்துள்ள கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர் வரும் ஜூலை 20 முதல் 28 ஆம் திகதி வரை சீனன் கோட்டை நளீம் ஹாஜியார் மைதானத்தில் நடைபெறும்.

இச்சுற்றுப் போட்டியில் சீனன் கோட்டை பகுதியைச் சேர்ந்த 32 கிரிக்கெட் கழகங்கள் பங்கேற்கவுள்ளன.

இறுதிப் போட்டி கழக ஆலோசகர் சர்பான் முஸம்மில் தலைமையில் நடைபெறுவதோடு பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், பெல்மடுள்ள ஸூபாஷ் ஜெம்ஸ் தலைவர் கே.எஸ்.எஸ் கருணாரத்ன ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் பணப் பரிசும் வழங்கப்படவுள்ளது.

# காசா 'படுகொலைகளில்' பலி 112 ஆக அதிகரிப்பு

## போர் நிறுத்த முயற்சியிலும் முட்டுக்கட்டை

காசாவில் மனிதாபிமான வலயங்களில் இஸ்ரேல் நடத்திய பயங்கர தாக்குதல்களில் கொல்லப்பட்டோர் எண்ணிக்கை 112 ஆக அதிகரித்திருப்பதோடு இந்த சம்பவத்தை அடுத்து போர்நிறுத்தப் பேச்சுவார்த்தையில் இருந்து ஹமாஸ் அமைப்பு விலகிக் கொண்டுள்ளது.

கான் யூனிஸ் நகரில் உள்ள மவாசி அகதி முகாம் மற்றும் காசா நகரில் உள்ள சட்டி முகாம்கள் மீதே இஸ்ரேல் நேற்று முன்தினம் (13) கடுமையான தாக்குதல்களை நடத்தியது.

இதில் பாதுகாப்பு வலயம் ஒன்றாக அறிவிக்கப்பட்டிருக்கும் மவாசியில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் கூடாரங்கள் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதல்களில் குறைந்தது 92 பேர் கொல்லப்பட்டு 300க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். தொடர்;ந்து சட்டி அகதி முகாமில் நண்பகல் தொழுகைக்காக மக்கள் ஒன்றுகூடி இருந்தபோது தொழுகை மண்டபத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஹமாஸ் ஆயுதப் பிரிவுத் தலைவர் முஹமது தெயிப் மற்றும் பிரதித் தலைவர் ரபா சலமா ஆகியோரை இலக்கு வைத்தே மவாசியில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

இந்த இருவரும் கொல்லப்பட்டனர் என்பது உறுதி செய்யப்படவில்லை என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சனிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார். 'எப்படி இருந்தாலும், ஹமாஸின் அனைத்து தலைவர்களையும் நாம் பிடிப்போம்' என்றார் நெதன்யாகு.

எனினும் தெயிப் கொல்லப்படவில்லை என்று மறுத்த ஹமாஸ் அமைப்பு, தாக்குதலை நியாயப்படுத்துவதற்கு இந்தப் பொய்யான கூற்றை இஸ்ரேல் கூறுவதாக குற்றம்சாட்டியது. கடந்த பல வாரங்களில் காசாவில் இடம்பெற்ற அதிக உயிரிழப்புக் கொண்ட தாக்குதலாக இது இருந்தது.

இந்தத் தாக்குதல் பூகம்பம் ஒன்று போல் இருந்ததாக அல் மவாசியைச் சேர்ந்த ஒருவர் பி.பி.சி. செய்தி நிறுவனத்திடம் விபரித்துள்ளார். தாக்குதலின் அதிர்வால் கூடாரங்கள் சிதைந்திருப்பதோடு உடல்கள் மற்றும் உடல் பாகங்கள் தரையில் சிதறுண்டு கணப்பட்டதாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர்.

'அனைத்துக் கூடாரங்களும் வீழ்த்தப்பட்டிருந்தோடு உடல் பாகங்கள், உடல்கள் எல்லா இடங்களிலும் காணப்பட்டன. வயது முதிர்ந்த பெண் ஒருவர் தரையில் வீசப்பட்டிருந்தார். சிறுவர்களின் உடல்கள் சிதறுண்டு காணப்பட்டனர்' என்று அல் மவாசியில் அடைக்கலம் பெற்றிருக்கும் காசா நகரைச் சேர்ந்த ஷெய்க் யூசப் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல்களில் சிறுவர்கள் மற்றும் பெண்களே அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதோடு கான் யூனிஸில் உள்ள நாசர் மற்றும் அமல் மருத்துவமனைகள் மற்றும் ரபா நகரில் உள்ள



குவைட்டி மருத்துவனை நிரம்பி வழிவதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

பொது மக்களின் உயிரிழப்புகளைக் கண்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்திருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தலைவர் அன்டோனியோ குட்டரஸ் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. காசாவில் எந்த இடமும் பாதுகாப்பு இல்லை என்று கூறிய அவர் அங்கு சர்வதேச மனிதாபிமான சட்டம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் இலக்கு வைத்த முஹமது தெயிப் இஸ்ரேலினால் பல தசாப்தங்களாக தேடப்பட்டு வருபவர்களில் முன்னிலையில் இருப்பவர் என்பதோடு இஸ்ரேலின்; பல படுகொலை முயற்சிகளில் இருந்தும் அவர் உயிர் தப்பியுள்ளார்.

'கொமாண்டர் முஹமது தெயிப் நலமாக இருப்பதோடு அனைத்தையும் வழிநடத்தி வருகிறார்' என்று ஹமாஸ் ஆயுதப் பிரிவு வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தவிர காசாவின் ஏனைய பகுதிகளிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்றன. காசா நகரின் யார்முக் அரங்கிற்கு அருகில் ஹாஜி குடும்ப வீட்டின் மீது இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதலை அடுத்து நால்வரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தவிர காசா நகரின் வடக்கில் வீடு ஒன்றின் மீது நேற்றுக் காலை இடம்பெற்ற தாக்குதல்களில் ஏழு சடலங்கள் மீட்கப்பட்டதாக காசா சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் மேலும் 141 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக நீடிக்கும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 38,584 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 88,881 பேர் காயமடைந்துள்ளனர்.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் பேச்சுவார்த்தைகள் கடந்த சில நாட்களாக மத்தியஸ்தம் வகிக்கும் எகிப்து மற்றும் கட்டாரில் இடம்பெற்று வந்த நிலையில் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் இஸ்ரேல் மேற்கொண்டு வரும் படுகொலைகள் காரணமாக அந்தப் பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகுவதாக ஹமாஸ் மூத்த அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் முதலில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனினால் வெளியிடப்பட்ட போர் நிறுத்த முன்மொழிவு தொடர்பிலான பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்படும் என்று ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே கட்டார் மற்றும் எகிப்து மத்தியஸ்தர்களிடம் குறிப்பிட்டிருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனினும் போர் நிறுத்த பேச்சில் இருந்து வெளியேறவில்லை என்று ஹமாஸின் மற்றொரு தரப்பு குறிப்பிட்டுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# படுகொலை சதி முயற்சியில் 'காதோடு' தப்பியினார் டிரம்ப்

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின்போது இடம்பெற்ற படுகொலை முயற்சியில் காதில் சுடப்பட்டார். இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலையோட்டி பெரும் பாதுகாப்பு குறைபாடாக இது பார்க்கப்படுவதோடு இந்தத் தாக்குதல் ஜனாதிபதி தேர்தலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக மாறியுள்ளது.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், டிரம்பை அவரது பாதுகாவலர்கள் சூழ்ந்துகொண்டதோடு, விரைவில் பாதுகாவலர்களுக்கு இடையே எழுந்து நின்ற டிரம்ப், இரத்தம் சொட்டும் நிலையில் கையை உயர்த்தி, 'போராடுவோம்! போராடுவோம்! போராடுவோம்!' என்று கோசம் எழுப்பினார். டிரம்ப் நலமாக இருப்பதாக அவரது பிரசாரக் குழுவினர் பின்னர் அறிவித்தனர்.

இந்த படுகொலை முயற்சியில் ஈடுபட்டவராக 20 வயதான பென்சில்வேனியாவின் பெதல் சிறு நகரைச் சேர்ந்த தோமஸ் மத்தியூஸ் என்பரை எப்.பி.ஐ. பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

இவர் டிரம்பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த வாக்காளர் என்பது மாநில தேர்தல் பதிவில் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிதாரி சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதோடு பேரணியில் பங்கேற்ற ஒருவர் கொல்லப்பட்டு மேலும் இரு பார்வையாளர்கள் காயமடைந்திருப்பதாக பாதுகாப்புச் சேவை அறிவித்துள்ளது. தாக்குதலின் நோக்கம் இன்னும் கண்டறியப்படவில்லை என்று சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டிரம்ப் கூட்டத்தின் முன் உரையாற்ற ஆரம்பித்தபோது துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. அப்போது அவர் தனது வலது கையால் வலது காதைப் பொத்திக்கொண்டு முழக்காலில் மண்டியிட்ட நிலையில் பாதுகாவலர்கள் அவரை சூழ்ந்துகொண்டனர்.

ஒரு நிமிடம் கழித்து அவர் எழுந்து நின்றதோடு, அவரது காவலர்கள் விரைவாக அவரை அங்கிருந்து அழைத்துச் சென்றனர்.

'நான் சுடப்பட்டதோடு துப்பாக்கி குண்டு எனது வலது காதின் மேல் பக்கத்தை துண்டாக்கியது' என்று டிரம்ப் தனது 'ட்ரூத்' சமூக ஊடகத்தில் குறிப்பிட்டுள்ளார். பென்சில்வேனியாவின் பட்லர் என்ற பகுதியிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

பென்சில்வெனிய மாநில பொலிஸாரின் உதவியுடன் அமெரிக்க இரகசிய சேவை அதிகாரிகளின் பாதுகாப்பின் கீழ் அவர் பட்லர் பகுதியில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டதோடு அவர் நியூயோர்க் ஜேர்சியில் உள்ள அவரது கொல்ப் விடுதியைச் சென்றடைந்தார்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி தேர்தல் நடைபெறுவதற்கு நான்கு மாதங்களுக்குக் குறைவான காலம் இருக்கும் நிலையிலேயே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டிரம்ப், பதவியில் உள்ள ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி ஜோ பைடனை எதிர்த்துப் போட்டியிடவுள்ளார். கடந்த தேர்தலிலும் இந்த இருவருமே போட்டியிட்ட நிலையில் இம்முறை இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவுவதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

இந்நிலையில் மில்வோக்கியில் இன்று ஆரம்பமாகும். குடியரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் டிரம்ப் அந்தக் கட்சியின் வேட்பாளராக உத்தியோகபூர்வமாக தேர்வு செய்யப்படவுள்ளார்.

இந்நிலையில் இந்த துப்பாக்கிச் சூடு அமெரிக்க பாதுகாப்புச் சேவையின் பாதுகாப்பு குறைபாடுகள் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளன.

இந்தப் பாதுகாப்புச் சேவை டிரம்ப் உட்பட முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஆயுள்கால பாதுகாப்பை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

1981 இல் குடியரசு கட்சி ஜனாதிபதி ரொனால்ட் ரீகன் மீதான படுகொலை முயற்சிக்குப் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி அல்லது பிரதான கட்சியின் வேட்பாளர் ஒருவர் மீதான முதலாவது துப்பாக்கிச் சூட்டு சம்பவமாக உள்ளது.

இந்த சம்பவத்திற்கு குடியரசு மற்றும் ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் தமது கண்டனங்களை வெளியிட்டிருந்தனர்.

'அமெரிக்காவில் இவ்வாறான வன்முறைகளுக்கு இடமில்லை. நாம் ஒரு நாடாக ஒன்றிணைந்து இதனைக் கண்டிக்கிறோம்' என்று ஜனாதிபதி பைடன் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

பேரணியில் பங்கேற்றிருந்த டிரம்ப் ஆதரவாளரான ரொன் மூஸ், நான்கு சூட்டுச் சத்தங்களை கேட்டதாகத் தெரிவித்துள்ளார். 'கூட்டத்தினர் கீழே குணிவதும் டிரம்ப் மிக விரைவாக கிழே செல்வதையும் கண்டேன்' என்றார்.



பாதுகாப்புச் சேவையால் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்ட பகுதிக்கு வெளியில் இருந்தே துப்பாக்கிச் சூடு வந்ததாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. தாக்குதல் குறித்து முன்னின்று விசாரணைகளை நடத்துவதாக எப்.பி.ஐ. குறிப்பிட்டுள்ளது.

சந்தேக நபரால் பல தடவைகள் சூடு நடத்த முடிந்திருப்பது ஆச்சரியம் அளிப்பதாக உள்ளது என்று எப்.பி.ஐ. அதிகாரிகள் சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

தாக்குதல்தாரியின் உடல் அவர் சூடு நடத்திய கட்டடத்தின் கூரையில் கிடக்கும் உறுதி செய்யப்படாத படங்கள் வெளியாகியுள்ளன.

துப்பாக்கிதாரி தனியாக இயங்கி இருப்பதாக நம்பப்படுகின்றபோதும் அது தொடர்பில் மேலதிக எந்த விபரத்தை சட்ட அமுலாக்கல் பிரிவினர் வெளியிடவில்லை.

# உக்ரைன் போர்: சீனா மீது நேட்டோ குற்றச்சாட்டு



உக்ரைன் மீதான ரஷ்யாவின் போருக்கு பொருள் ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சீனா ஆதரவளிப்பதாக நேட்டோ நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

ரஷ்யாவுக்கு அவ்வாறு அளித்துவரும் அனைத்து ஆதரவையும் சீனா நிறுத்த வேண்டுமெனவும் நேட்டோ வலியுறுத்தியுள்ளது.

32 நாடுகள் அங்கம் வகிக்கும் நேட்டோ அமைப்பின் 75ஆவது உச்சி மாநாடு அமெரிக்காவின் வொஷிங்டனில் நடைபெற்றபோதே சீனா மீது இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டு வலியுறுத்தல் விடுக்கப்பட்டதோடு கண்டித்து கூட்டு பிரகடனமொன்றும் வெளியிடப்பட்டது.

சீனாவின் ஏற்றுமதிகளுக்கு தடைகள் இருந்த போதிலும் ரஷ்யாவின் பாதுகாப்பு கைத்தொழில் துறைக்கு சீனாவின் இயந்திர உபகரணங்களும் ஏனைய உதிரிப்பாகங்களும் இன்றியமையாதவையாகி உள்ளன. அவை உக்ரைன் மீதான போருக்கு ஊக்கமளிக்கின்றன என்றும் நேட்டோ குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.